விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 349 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 17 புதன்கிழமை (03.12.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## திருநெல்வேலியில் இளைஞன் வெட்டிப் படுகொலை

### 6 பேர் பொலிஸாரால் கைது



(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலியில் கடந்த 30ஆம் திகதி இளைஞன் ஒருவர் துரத்தித் துரத்தி வெட்டிக் கொலை செய்த சம்பவத்துடன் தொடர்புடைய 6 சந்தேகநபர்கள் நேற்றுக்

14ஆம் பக்கம் பார்க்க

## அனர்த்தத்தால் உயிரிழந்தோர் 465 ஆக அதிகரிப்பு

### 366 பேர் மாயம்

(கொழும்பு)

நாட்டின் 25 மாவட்டங்களையும் பாதித்துள்ள அனர்த்த நிலைமை காரணமாக, உயிரிழந்தோரின் எண்ணிக்கை 465 ஆக அதிகரித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம்

14ஆம் பக்கம் பார்க்க

'டித்வா' புயலால் நாட்டில் மூன்றில் ஒரு பகுதி நாசம்

# இலங்கையை மீட்டெடுக்க ரூ.31 பில்லியன் தேவை

*(கொழும்பு)*

**நாட்டில் நிலவிய அதிதீவிர வானிலை காரணமாக, ஏற்பட்ட சேதங்களிலிருந்து இலங்கையை மீட்டெடுப்பதற்கு, சுமார் 31 பில்லியன் ரூபாய் தேவைப்படுவதாக இலங்கை அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.**

(02ஆம் பக்கம் பார்க்க)

## உயர்தரப் பரீட்சை ஜனவரி நடைபெறும்

(கொழும்பு)

க.பொ.த உயர்தரப் பரீட்சையை 2026 ஜனவரி மாத ஆரம்பத்தில் நடத்த முடிவு செய்துள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் நாலக கலுவேவா தெரிவித்தார்.

தற்போதைய பேரிடர்

14ஆம் பக்கம் பார்க்க

## முன்னாள் அமைச்சர் சி.பி.ரத்நாயக்க

### கைதாகி விளக்கமறியல்



(கொழும்பு)

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கைது செய்யப்

14ஆம் பக்கம் பார்க்க

## இலங்கை மக்களின் இயல்பு வாழ்க்கையை கட்டியெழுப்ப உதவுக

### உலக வங்கிப் பிரதிநிதியிடம் சஜித்



(கொழும்பு)

பேரிடரால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களின் இயல்வு வாழ்க்கையை கட்டியெழுப்ப உதவுக என உலக வங்கிப் பிரதிநிதியிடம் எதிர்க்கட்சித் தலைவர்

14ஆம் பக்கம் பார்க்க

## வடகிழக்குப் பருவப் பெயர்ச்சி ஆரம்பம்

### டிசம்பர் 4ஆம் திகதி முதல் மழையுடனான காலநிலை

(கொழும்பு)

எதிர்வரும் சில நாட்களில் நாடு முழுவதும் வடகிழக்குப் பருவப் பெயர்ச்சி நிலைமை படிப்படியாக நிலைபெறும் என எதிர்பார்ப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, டிசம்பர் 04ஆம் திகதி முதல்

15ஆம் பக்கம் பார்க்க

## பட்ஜெட் விவாதம் இன்று ஆரம்பம்

(கொழும்பு)

பட்ஜெட் விவாதம் இன்று காலை 9.00 மணிக்கு பாராளுமன்றத்தில் மீண்டும் ஆரம்பமாகவுள்ளது.

வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு மேம்பாட்டு அமைச்சகம்

15ஆம் பக்கம் பார்க்க

## உணர்வெழுச்சியுடன் இடம்பெற்ற ஒதியமலைப் படுகொலையின் 41ஆம் ஆண்டு நினைவேந்தல்




14ஆம் பக்கம் பார்க்க

## பேரிடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வீடுகளுக்கான மின்சாரம் துண்டிக்கப்படாது

(கொழும்பு)

பேரிடர் பாதித்த பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு மின்சாரம் துண்டிக்கப்படாது என்று இலங்கை மின்சார சபையின் பொது மேலாளர் ஷெர்லி குமார தெரிவித்தார்.

இந்தப் பகுதிகளில்

14ஆம் பக்கம் பார்க்க

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22 விற்பனைக்கு 22

01. யாழ். பலாலி வீதியில் பரமேஸ்வராச் சந்திக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 5 பரப்பு காணியும்
02. யாழ். பலாலி வீதியில் அம்மாச்சி கடைக்கு அண்மையில் பலாலி வீதி முகப்புடன் 9 3/4 பரப்பு காணியும் 5 பரப்புக் காணியும்
03. யாழ். பிறவுண் வீதியில் 30 அடி அகலமும் 100 அடி நீளமும் கொண்ட பிறவுண் வீதி முகப்புடன் கொண்ட காணியும்
04. யாழ். ஆஸ்பத்திரி வீதியில் 15 அடி அகலமும் 30 அடி நீளமும் (SVM வர்த்தக நிலையத்திற்கு முன்பாக) கடையும்
05. யாழ். ஸ்ரான்லி வீதியில் 40 அடி அகலமும் 200 அடி நீளமும் கொண்ட 4 மாடி புதிய கட்டடமும் உடன் விற்பனைக்குண்டு.

(C-4472)

தொடர்பு : 0777 232 535


# கண்ணீர் அஞ்சலி



மண்மகிழ 16.10.1948 கண் நெகிழ 30.11.2025

யாழ். கோவை மனவளக்கலை மன்ற அறக்கட்டளையின் அறங்காவலர் **பேராசிரியர் தேவதாஸ்** அவர்களின் பாசமிகு துணைவி

அமரர் **அருள்நிதி தேவதாஸ் மேரி செல்வ சறோஜினி**

அவர்களின் இறைபதம் குறித்து எமது நிலையம் ஆத்ம சாந்தி தவத்தை ஆற்றி அஞ்சலிப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!

WCSC யாழ் மண்டலம்

(C-4473)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

இவ்வுலகிற்கு 18 - 08 - 1945



விண்ணுலகிற்கு 02 - 12 - 2025

## சிவகுரு சிவச்செல்வம்

(முன்னாள் அதிபர் – யா/வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்)

அச்சுவேலி, தம்பாலையைப் பிறப்பிடமாகவும், உடுப்பிட்டி மற்றும் கதிரிப்பாய் அச்சுவேலியை வதிவிடமாகவும் கொண்ட சிவகுரு சிவச்செல்வம் அவர்கள் நேற்று (02.12.2025) செவ்வாய்க்கிழமை அமரத்துவம் எய்தி விட்டார்.

அன்னார் தம்பாலை சிவகுரு - நாகம்மா தம்பதியரின் ஏகபுதல்வனும் உடுப்பிட்டி, முருகேசு - வள்ளியம்மா தம்பதியரின் மருமகனும் கண்ணகை அம்மா அவர்களின் அன்புக் கணவரும் சிவதர்சினி (போதனாசிரியர் - தொழிற்பயிற்சி அதிகாரசபை, மன்னார்), பரோபன் (கனடா), தர்ஷீபன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் அம்பிகைபாகன் (ஓய்வு நிலை செயற்திட்ட அதிகாரி, தென்மராட்சி கல்வி வலயம்), சங்கீதா (கனடா), தர்ஷலா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2025) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கதிரிப்பாய், அச்சுவேலியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக தீர்த்தாங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

077 178 3316

(6047)

## இலங்கையை...

அத்துடன் டித்வா புயல், நாட்டின் மூன்றில் ஒரு பகுதியை நாசமாக்கியுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் இலங்கை தொடர்பில் கவலையை வெளிப்படுத்தியுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிறிஸ்டலினா ஜோர்ஜியேவா, இலங்கையின் மீட்சிக்கும் மீளெழுச்சிக்கும் அவசியமான ஆதரவை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியம் தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் மற்றும் சமூகங்களுடனும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசியமான உதவிகளை வழங்கிவரும் மீட்புப் பணியாளர்கள், மருத்துவப் பணியாளர்களுடனும் தாம் உடன் நிற்பதாக தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோசா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 50 ஆயிரம் அமெரிக்க டொலரை நன்கொடையாக வழங்கவுள்ளதாக மாலைதீவின் வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


## மணமகன் தேவை

ஐரோப்பிய மணமக்களுக்கு IT, Doctor படித்த மணமக்கள் தேவை.

தொடர்புகளுக்கு :
077 889 4353 (Whatsapp)
0049764752219 (Viber)
00491741789740 (Whatsapp)

(1753)

## றோயல் அக்கடமி
## ROYAL ACADEMY

வைமன் றோட், நல்லூர். அரசடி றோட், யாழ். நகர்.

புதிய கல்வியாண்டு - 2026

தரம் 6 தமிழ்மொழி மூலம் English Medium

ஆரம்பம் 04.12.2025 வியாழக்கிழமை காலை 7.45 மணி

கணிதம், விஞ்ஞானம், தமிழ், ஆங்கிலம் வரலாறு, புவியியல், குடியுரிமை, சுகாதாரம், I.C.T. சிங்களம், முயற்சியாண்மை

ஆகிய பாடங்களை ஒரே இடத்தில் கற்பதற்கான அரியவாய்ப்பு!

(6056)

குறிப்பு : ● மாதாந்தப் பரீட்சைகள் இடம்பெறும், (புள்ளிகள் பெற்றோருக்கு வழங்கப்படும்.)
● ஒவ்வொரு தவணை முடிவிலும் பெற்றோர் - ஆசிரியர் சந்திப்பு இடம்பெறும்.

- இயக்குநர் -

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 076 636 3378 | 076 097 3127

## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், வங்கியாளர், ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர் மற்றும் தனியார் துறையினர், வெளிநாட்டு மணமக்கள் எனப் பல்லாயிரக் கணக்கானோர் எம்மிடம் உள்ளனர்.


மிகப் பொருத்தமாக உடன் ஜாதகங்கள் தரப்பட்டு மிகத் துரிதமாக திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(துர்க்கா மணி மண்டபம் தாண்டி 3 வீடு தள்ளிய லேனில்)
021 222 9306, 077 138 7596, 071 999 9306

(C-4476)


# மரண அறிவித்தல்

## துரைசிங்கம் சாந்தரூபன் (ரூபன்)



நெடுந்தீவு கிழக்கினைப் பிறப்பிடமாகவும் வவுனியா திருநாவற்குளத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் சாந்தரூபன் அவர்கள் நேற்று செவ்வாய்க்கிழமை 02.12.2025 வவுனியாவில் காலமானார்.

அன்னார் துரைசிங்கம் - மேரி பிலோமினா (ரஞ்சி) தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இலங்கநாதன் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் சிவறஞ்சினி ( சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் - செட்டிக்குளம் பிரதேச செயலகம்) அவர்களின் அன்புக் கணவரும் கிஷாந்தன், ஜனகன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் அன்ரன் லீனகே, பாக்கியநாதன், யசோமதி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சுமித்திரா, மகேஸ்வரி, நடராசா ஆகியோரின் மைத்துனரும் மனோரஞ்சினி, தயாரஞ்சினி, அழகரத்தினம், இலங்கரத்திரம், வேணி ஆகியோரின் மைத்துனரும் சிவசுப்பிரமணியம், கணேசலிங்கம், விஜயமாலா, சுதர்சன் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 03.12.2025 புதன்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தனக்கிரியைகளுக்காக வவுனியா பூந்தோட்டம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

392, திருநாவற்குளம், வவுனியா.

(6055)

தகவல் : மனைவி
077 266 4176

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் நிவாரண உதவித் திட்டத்தில் மோசடிகள் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்துக

## வடக்கு ஆளுநர் நா.வேதநாயகன்



(யாழ்ப்பாணம்)

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண மக்களுக்கு உதவுவதற்கு உள்ளூர் மற்றும் புலம்பெயர் உறவுகள் ஆர்வத்துடன் முன்வருகின்றமை மகிழ்ச்சியளிப்பதாக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

எனினும் இவ்வுதவிகள் பயனாளிகளைச் சரியான முறையில் சென்றடைவதையும் மோசடிகள் இடம்பெறாதிருப்பதையும் உறுதிப்படுத்த அந்தந்த மாவட்டச் செயலர்களின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள "இடர் முகாமைத்துவக் குழுக்களை" தொடர்புகொள்ளுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று (02) காலை ஆளுநர் செயலகத்தில் ஐ.நா. முகவர் அமைப்புக்கள், சர்வதேச மற்றும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் நடைபெற்ற அவசர கலந்துரையாடலின்போதே ஆளுநர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், அனைவரும் ஒரே வகையான உதவிகளை வழங்குவதைத் தவிர்த்து ஒவ்வொரு மாவட்டத்திலுமுள்ள உண்மையான தேவைகளை அறிந்து உதவுங்கள். இதற்கு மாவட்டச் செயலகங்களில் உருவாக்கப்பட்டுள்ள "இடர் முகாமைத்துவக் குழுக்களை" அணுகுங்கள்.

வெளிநாடுகளில் நிதி திரட்டி பெயரளவில் உதவிகளைச் செய்துவிட்டுப் புகைப்படங்களை மட்டும் அனுப்பும் மோசடிக் கும்பல்கள் தொடர்பில் விழிப்புடன் இருக்கவும்.

மாவட்டச் செயலகத்தின் பரிந்துரை அல்லது அங்கீகாரம் இல்லாமல் தனிப்பட்ட ரீதியில் அணுகுபவர்களிடம் கவனமாக இருக்கவும்.

மக்கள் தற்போது வீடுகளுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளனர். எனவே உணவுப் பொதிகளைத் தாண்டி, அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் மீள்குடியேற்றத்திற்குத் தேவையான உதவிகளை வழங்குவது பயனுள்ளதாக அமையும்.

அரசாங்கம் வழங்கும் நிவாரணங்களுக்கு மேலதிகமாக மக்களுக்குத் தேவைப்படும் ஏனைய அவசியமான உதவிகளைத் தன்னார்வலர்கள் பொறுப்பேற்பது சிறந்தது." எனத் தெரிவித்தார்.

இதேவேளை நிவாரணப் பணிகளை ஒருங்கிணைக்க விரும்புவோர் பின்வரும் மாவட்டச் செயலக பதவிநிலை அதிகாரிகளைத் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் : சுரேந்திரநாதன் - 077 484 0199, கிளிநொச்சி: அஜித்தா - 077 565 0671, மன்னார் : பிரதீப் - 071 990 5324, வவுனியா : கமலதாசன் - 077 613 8369, முல்லைத்தீவு: ரஜினிகாந்த் - 077 370 7720 / கோகுலராஜ் - 077 395 7886.

"மேற்படி அதிகாரிகளை தொடர்பு கொண்டு அவர்களிடம் பொருட்களை ஒப்படைக்க முடியும் என நேற்றைய கூட்டத்தில் கருத்துரைக்கப்பட்டுள்ளது. (ம-7)

## மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களுக்கு யாழ்ப்பாண வணிகர் கழகத்தினால் ரூ.15 இலட்சம் பெறுமதியான நிவாரணப் பொருட்கள்





(யாழ்ப்பாணம்)

டித்வா புயலால் நாட்டில் ஏற்பட்ட கடும் மழை மற்றும் வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிப் பொருட்களை யாழ்ப்பாணம் வணிகர் கழகம் வழங்கியுள்ளது.

கிளிநொச்சி, மன்னார் மாவட்ட மக்களுக்கு வழங்குவதற்காக 15 இலட்சம் ரூபா பெறுமதியான உலருணவுப் பொருட்கள் அந்தந்த மாவட்ட செயலர்களிடம் யாழ்.வணிகர் கழக நிர்வாகத்தினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

குறித்த உலருணவுப் பொருட்கள், அத்தியவசிய பொருட்களும் மாவட்டச் செயலகங்கள் ஊடாகப் பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடையவுள்ளன.

யாழ். வர்த்தகர்களின் பாரிய நிதிப்பங்களிப்போடு யாழ். வணிகர் கழகம் ஊடாக குறித்த மனிதாபிமானப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மரண அறிவித்தல்

மண்ணில் 16 - 10 - 1948



விண்ணில் 30 - 11 - 2025

### திருமதி மேரி செல்வசறோஜினி தேவதாஸ்
### (அருள்நிதி - மனவளக்கலை ஆசிரியர்)

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் தெற்கு மாதா கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மேரி செல்வசறோஜினி தேவதாஸ் (அருள்நிதி - மனவளக்கலை ஆசிரியர்) அவர்கள் கடந்த (30.11.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் யக்கரியாஸ் தேவதாஸ் அவர்களின் பாசமிகு மனைவியும் யஸ்ரின் யூட் - யறின் மேரி மெடோனா - சோபி அருட்சகோதரி மேரி கனிசியா செபமாலைத்தாசர் சபை டெனற்சியா - டெனா ஆகியோரின் அன்புத் தாயாரும் கனிஸ்ரியா, தர்மசூரி பெர்ணாண்டோ (டொறின்), டினேஸ் சோதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் செல்வரத்தினம், செல்வபுஷ்பம் (அமரர்), செல்வபாக்கியம், செல்வதாசன் (அமரர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் றொபினா, மித்திஸ் கவிஸ் (பிரான்ஸ்), டானியல் (ஜேர்மன்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஆன்ம உடல் இன்று (03.12.2025) புதன்கிழமை கோப்பாய் தெற்கு மாதா கோவிலில் பிற்பகல் 3.00 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் நெடுந்தீவுக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதையும் நல்லடக்கம் எதிர்வரும் (05.12.2025) வெள்ளிக்கிழமை இடம்பெறும் என்பதையும் உற்றார், உறவினர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
076 109 3965

(6059)

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர் படவரைஞர்களை பதிவு செய்தல் - 2026

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் கட்டட அனுமதிக்கான வரைபடங்களை வரைய விரும்பும் படவரைஞர்கள் (புதிதாக பதிவு செய்ய விரும்புபவர்கள் மற்றும் பதிவினை புதுப்பித்துக்கொள்ள விரும்புபவர்கள்) கீழ்வரும் விடயங்களை கருத்தில் கொண்டு உரிய ஆவணங்களுடன் 03.12.2025 ஆம் திகதி முதல் 30.01.2026 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் பி.ப 03.00 மணிக்கு முன்னர் தலைமை அலுவலகத்தின் திட்டமிடல் பகுதியில் பதிவுகளை மேற்கொள்ளலாம் என்பதனை சகல படவரைஞர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

- NVQ - 5 in Drafting Technology (Building) செய்தவர்கள் மற்றும் எமது பிரதேச சபையில் 2025 ஆம் ஆண்டிற்கான படவரைஞர் பதிவினை மேற்கொண்டவர்களில் தற்போது NVQ - 5 in Drafting Technology (Building) கற்கை நெறியினை தொடர்பவர்கள் உரிய சான்றிதழினை சமர்ப்பித்து படவரைஞருக்கான பதிவினை மேற்கொள்ளலாம்.
- 30.01.2026 இற்கு முன்னர் பதிவுகளை புதுப்பிக்க தவறும் படவரைஞர்கள் தாமத கட்டணமாக ரூபா 1000.00 இனை செலுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
- வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் பதிவு செய்ய தவறிய அல்லது புதுப்பிக்க தவறிய எந்தவொரு படவரைஞரும் எமது பிரதேச சபையில் 2026 ஆம் ஆண்டிற்கான படவரைஞராக தொழிற்பட முடியாது.

குறிப்பு:-

- படவரைஞராக பதிவுசெய்தல்/புதுப்பித்தல் விண்ணப்ப படிவக் கட்டணம் ரூபா 1000.00.
- புதிதாக படவரைஞராக பதிவு செய்வதற்கான கட்டணம் ரூபா 3000.00.
- 2025 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டு 2026 ஆம் ஆண்டிற்காக பதிவினை புதுப்பிப்பதற்கான கட்டணம் ரூபா 2000.00.

தியாகராஜா நிரோஷ்,
தவிசாளர்,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,
புத்தூர்.

03.12.2025 (C-4471)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2026 ஐ.பி.எல் ஏலம்; இலங்கை வீரர்களுக்கு வாய்ப்பு

2026 ஐபிஎல் தொடரின் கிரிக்கெட் வீரர்கள் ஏலத்தில் சேர்க்கப்படும் 46 வீரர்களில் மூன்று இலங்கை கிரிக்கெட் வீரர்கள் அடங்குவர் எனவும் அவர்களின் அதிகபட்ச விலை 20 மில்லியன் ரூபாயாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.


மதீஷ பத்திரன, மஹிஷ் தீக்‌ஷன மற்றும் வனிந்து ஹசரங்க ஆகியோர் அதில் உள்ளடங்குவர்.

நவம்பர் 30 ஆம் திகதி பதிவு காலக்கெடுவுக்குப் பின்னர் பதிவு செய்த 1,355 கிரிக்கெட் வீரர்களின் நீண்ட பட்டியல் நேற்று முன்தினம் அணிகளின் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த ஆண்டு ஏலத்தில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் சகலத்துறை வீரர் கெமரோன் கிரீனும் சிறந்த வீரர்களில் ஒருவராக இருப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்படி, டிசம்பர் 16 ஆம் திகதி அபுதாபியில் மினி ஏலம் நடைபெறவுள்ளது.

அதற்கு முன்னதாக டிசம்பர் 5 ஆம் திகதிக்குள் அணிகளின் உரிமையாளர்கள் தங்கள் குறுகிய பட்டியலைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது. (3)



# லங்கா பிரீமியர் லீக்கிற்கான புதிய திகதி அறிவிப்பு!

லங்கா பிரீமியர் லீக்கின் ஆறாவது சீசன் 2026 ஜூலை 8 முதல் ஓகஸ்ட் 8 வரை நடைபெறும் என்று ஸ்ரீலங்கா கிரிக்கெட் அறிவித்துள்ளது.

முதலில் 2025 டிசம்பரில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த போட்டி ஒத்திவைக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆறாவது சீசனுக்கான புதிய திகதிகள் இறுதி செய்யப்பட்டன.

2026 பெப்ரவரி-மார்ச் மாதங்களில் இலங்கை மற்றும் இந்தியா இணைந்து நடத்தும் 2026 ஐ.சி.சி ஆடவர் ரி-20 உலகக் கிண்ணத்தை நடத்தும் இடங்களை முன்கூட்டியே ஆயத்தம் செய்வதற்கான பரந்த தேவையைக் கருத்தில் கொண்டு இந்த ஒத்திவைப்பு செய்யப்பட்டது.

இந்த முடிவின் மூலம், இலங்கையின் சிறந்த உள்நாட்டு ரி-20 போட்டியான ஐந்து அணிகள் கொண்ட போட்டி, முந்தைய பல சீசன்களைப் போலவே, அடுத்த ஆண்டு நடுப்பகுதியில் மீண்டும் தொடங்கும் என்று ஸ்ரீலங்கா கிரிக்கெட் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது. (3)

# சச்சினின் வாழ்நாள் சாதனையை தகர்த்த விராட்கோலி

இந்தியா - தென் ஆப்பிரிக்கா இடையிலான 3 ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் போட்டி ராஞ்சியில் ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றது.

இதில் நாணய சுழற்சியில் வென்ற தென் ஆபிரிக்க அணியின் கப்டன் மார்க்ரம் பந்து வீச்சை தேர்வு செய்தார்.

அதன்படி முதலில் துடுப் பாட்டம் செய்ய களமிறங்கிய இந்திய அணி தரப்பில் விராட் கோலி சிறப்பாக ஆடி ஓட்டங்கள் குவித்தார். தென் ஆபிரிக்க பந்து வீச்சை திறம்பட சமாளித்த அவர் சதம் விளாசி அசத்தினார்.

இது ஒரு நாள் கிரிக்கெட்டில் அவரது 52 ஆவது சதமாக பதிவானது. தொடர்ந்து அதிரடியாக அவர் 135 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

முதல் ஒருநாள் போட்டி: தென் ஆபிரிக்க அணியை வீழ்த்தி வெற்றியுடன் தொடங்கிய இந்தியா இதன் மூலம் சர்வதேச கிரிக்கெட் வரலாற்றில் (3 வடிவலான போட்டிகள், டெஸ்ட், ஒரு நாள் மற்றும் ரி - 20) அதிக சதம் விளாசிய வீரர் என்ற சச்சினின் வாழ்நாள் சாதனையை தகர்த்து புதிய சாதனை படைத்துள்ளார்.

இதற்கு முன்னர் சச்சின் டெண்டுல்கர் டெஸ்ட் கிரிக்கெட்டில் 51 சதங்கள் அடித்திருந்ததே ஒரு வீரர் அடித்த அதிகபட்ச சதங்களாக இருந்தது. தற்போது அதனை முந்தி யுள்ள விராட் கோலி ஒரு நாள் கிரிக்கெட்டில் 52 சதங்களுடன் புதிய வரலாறு படைத்துள்ளார். (3)



வேறு அணியில் விளையாட விருப்பமில்லை

# ஐ.பி.எல் தொடரில் இருந்து ஓய்வை அறிவித்த ஆண்ட்ரே ரஸல்!



அதிரடி மன்னன் ஆண்ட்ரே ரஸல் ஐ.பி.எல் தொடரில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

மினி ஏலத்தில் அவருக்கு மிகப் பெரிய ஜாக்பாட் காத்திருந்த வேளையில், அதையெல்லாம் உதறித் தள்ளும்படியான அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

மிகச் சிறந்த ஆல்ரவுண்டராக இருந்த ஆண்ட்ரே ரஸல் இந்த சீசனுடன் கொல்கத்தா அணியில் இருந்து விடுவிக்கப்பட்டார்.

மினி ஏலத்தில் அவருக்கு அதிக தொகை கொடுத்து எடுக்க சி.எஸ்.கே போன்ற அணிகள் காத்திருந்த வேளையில் அதிர்ச்சி அளிக்கும் முடிவை அறிவித்துள்ளார்.

கொல்கத்தா அணியில் பவர் கோச் என்ற பதவியில் தொடர்வதாகவும் மற்ற ஐ.பி.எல் அணிகளில் விளையாட விருப்பமில்லை எனவும் உருக்கமாக வீடியோ வெளியிட்டுள்ளார்.

2014- 2025 வரை கொல்கத்தா அணியில் ரஸல் விளையாடியுள்ளார். இந்தக் கடினமான முடிவு குறித்து அவர் கூறியதாவது,

கொல்கத்தா ரசிகர்களுக்கு மிகப் பெரிய செய்தி. நான் ஐ.பி.எல் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுகிறேன். உலகின் மற்ற லீக்குகளில் தொடர்ந்து விளையாடுவேன்.

இன்ஸ்டாகிராம் உலகில் நாம் வாழ்கிறோம். என்னுடைய டைம் லைனில் நான் வேறு ஐ.பி.எல் அணிகளின் உடைகளைப் பார்க்கும்போது மிகவும் மோசமாக உணர்ந்தேன்.

எனக்கென ஒரு பாரம்பரியத்தை உண்டாக்க நினைக்கிறேன். உறக்கமில்லாத பல இரவுகள் இருந்தன. கொல்கத்தா அணியின் நிர்வாகிகள் உடன் பேசினேன். அவர்கள் என் மீது அன்பும் மரியாதையும் வைத்துள்ளார்கள்.

எனக்கு பவர் கோச் என்ற பதவியை வழங்கியுள்ளார்கள். அதுதான் நான். அதுதான் என்னை வரையறை செய்கிறது.

துடுப் பாட்டத்தில் என்னுடைய அதிரடி துடுப்பாட்டத்தை பிரதிபலித்தது. தொடர்ந்து பயணிப்போம் என்றார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு ரஷ்யா துணை நிற்கும்
## ரஷ்ய ஜனாதிபதி புடின்



(மொஸ்கோ)

இலங்கை முழுவதும் அண்மையில் ஏற்பட்ட வெள்ளம், மண்சரிவுகளால் ஏற்பட்ட உயிர் இழப்பு மற்றும் பெருமளவிலான சேதங்களுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிற்கு தனது இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

தனது இரங்கல் செய்தியில் அவர், மனித உயிரிழப்புகள் மற்றும் பரவலான சேதங்களுக்கு வருத்தம் தெரிவித்தார். இந்த கடினமான காலகட்டத்தில் ரஷ்யா இலங்கையுடன் துணை நிற்கிறது.

உயிரிழந்தவர்களின் குடும்பங்கள் மற்றும் அன்புக்குரியவர்களுக்கு தனது அனுதாபங்களையும் ஆதரவையும் தெரிவிக்குமாறு ஜனாதிபதி திஸாநாயக்கவை புடின் கேட்டுக்கொண்டார்.


அதே நேரத்தில் காயமடைந்த அனைவரும் விரைவில் குணமடைய வாழ்த்துகிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அண்மைய வரலாற்றில் மிக மோசமான இயற்கை பேரழிவுகளை எதிர்கொண்ட இலங்கையில் இப்பெரிய அளவிலான மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளைத் தொடர்ந்து வரும் நிலையில் ரஷ்ய ஜனாதிபதியின் இந்த செய்தி வந்துள்ளது. (நி)

# இலங்கையின் மீட்பு பணிகளுக்கு முழு ஆதரவு வழங்கப்படும்
## ஜனாதிபதிக்கு இந்தியப் பிரதமர் உறுதி

(டில்லி)

**நிவாரணம், மறுவாழ்வு மற்றும் மீள்கட்டமைப்பு பணிகளின் போது தேவையான அனைத்து உதவிகளையும் இந்தியா தொடர்ந்து வழங்கும் என்று இந்தியப் பிரதமர் மோடி ஜனாதிபதி அநுரகுமாரவிடம் உறுதியளித்தார்.**



டித்வா சூறாவளியால் ஏற்பட்ட பேரழிவைத் தொடர்ந்து நேற்று திங்கட்கிழமை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, இலங்கை மக்களுக்கு தனது மனமார்ந்த இரங்கலைத் தெரிவித்ததுடன் மேற்கண்டவாறும் தெரிவித்தார்.

இந்த நேரத்தில் இந்திய மக்கள் இலங்கை மக்களுடன் உறுதியான ஒற்றுமையுடனும் ஆதரவுடனும் நிற்பதாக அவர் தெரிவித்தார் .

இதன்போது, இந்தியாவின் உதவிக்கு தனது ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்ட ஜனாதிபதி அநுர குமார, மீட்புக் குழுக்கள் மற்றும் நிவாரணப் பொருட்களை விரைவாக அனுப்பியதற்குப் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

கடந்த வாரம் டித்வா சூறாவளி பல உயிரிழப்புகளையும், வீடுகள் மற்றும் உள்கட்டமைப்புகளுக்கு பெரும் சேதத்தையும், ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்ததையும் அடுத்து, இந்தியாவின் மீட்பு முயற்சிகளின் சரியான நேரத்தில் மற்றும் பயனுள்ள தன்மையையும் அவர் எடுத்துரைத்தார். (நி)

# சீரற்ற வானிலையால்
## பல இலட்சம் கோழிகள் உயிரிழப்பு

(கொழும்பு)

சீரற்ற வானிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவினால் சுமார் 15 இலட்சம் கோழிகள் உயிரிழந்துள்ளதாக அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தெதுறு ஓயாவை அண்டிய பகுதிகளில் ஏற்பட்ட அனர்த்தத்தினால் மாத்திரம் சுமார் 10 இலட்சம் கோழிகள் உயிரிழந்துள்ளன.

இதன் காரணமாக, முட்டை உற்பத்தி நூறில் நாற்பது வீதம் குறைவடைந்துள்ளதாகவும் முட்டையின் விலை உயர்ந்துள்ளதாகவும் அகில இலங்கை முட்டை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (நி)

# மினிப்பேயில் மண்சரிவில் சிக்கிய 22 பேரின் சடலங்கள் மீட்பு

(நுவரெலியா)

மினிப்பே - நெலுங்கம பகுதியில் மண்சரிவில் சிக்கிய 22 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட மண்சரிவில் சிக்குண்டவர்களின் சடலங்களே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

மினிப்பே - நெலுங்கம பகுதியில் மொத்தம் 16 வீடுகள் காணப்பட்டுள்ள நிலையில் மொத்தம் 12 வீடுகள் மண்சரிவில் சிக்குண்டுள்ளன.

மண்சரிவுக்குள்ளான 16 வீடுகளில் வசித்த 30 பேர்களில் 22 சடலங்கள் தற்போது மீட்கப்பட்டுள்ளன.

தொடர்ந்தும் மீட்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

# இராசிபலன்

03.12.2025
கார்த்திகை 17, புதன்கிழமை
திரயோதசி முற்பகல் 10.24 மணிவரை

பரணி பிற்பகல் 4.54 மணிவரை
சுப நேரம் 4.45 -6.15 மணிவரை
இராகுகாலம் 12.15-1.45 மணிவரை
திருக்கார்த்திகை விரதம் ,குமாராலய தீபம்

சந்திராஷ்டமம்: அத்தம், சித்திரை.

வளவன்




சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.




பயணத்தால் பணவரவு கிடைக்கும், நண்பர்கள் மத்தியில் மதிப்பும் மரியாதையும் கிடைக்கும், தலைமைப் பொறுப்புக்கள் தேடி வரலாம், போசன சுகமுண்டு.




பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், உறவினர், நண்பர்கள் சந்திப்பால் நன்மையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.




மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச்சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், வழிபாட்டால் அமைதிகாண வேண்டிய நாள், அலைச்சல்கள் சற்று கூடும்.




வியாபார விருத்தியுண்டு, மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், புதிய முயற்சிகள் கைகூடும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, ஆன்றோர்களின் சந்திப்புக்கள், இடம்பெறலாம்.




விருந்துகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரும், பணத்தேவைகள் திருப்தி தரும் வகையில் அமையும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள்.




பக்குவமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், வழிபாட்டு சிந்தனை மேலோங்கும் நாள்.




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், பணவரவு எதிர்பார்த்தபடி கிடைக்கும் வாய்ப்புண்டு.




தொழிலில் அதிகாரிகளை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, எடுத்த காரியங்களை உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், உடல்நலனில் கவனம் எடுக்கும் சூழ்நிலை ஏற்படலாம்.




மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், காலை நேரத்திலேயே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.




பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பொது நலனில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

அன்பு இருக்கும் இடம் சொர்க்கம் அன்பு மறையும் இடம் நரகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழிவுகளை வீதியில் போடுவோரைக் கண்டால் பிரதேச சபையிடம் முறையிடுங்கள்

## தவிசாளர் சுரேந்திரன்

(கரணவாய்)

**டித்வா புயல் அனர்த்தத்தினால் தங்கள் வளாகத்தினுள் வாழை மற்றும் இதர மரங்கள் முறிந்திருப்பின் அவற்றை வீதியில் வீசுவதை முற்றாக தவிர்க்குமாறு வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை தவிசாளர் சுரேந்திரன் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தாங்கள் குப்பைகளை வீதியில் இடுவதால் தொற்று நோய்கள் மற்றும் நுளம்பு பெருகும் வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுகின்றன.

தங்களுடைய மரங்கள் மற்றும் ஏனைய உக்கக்கூடிய கழிவுகளை பிரதேச சபைக்கு குறைந்த கட்டணம் ஒன்றை செலுத்துவதன் மூலம் இக் கழிவகற்றல் செயற்பாடுகளை சபை மூலமாக மேற்கொள்ளலாம் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே நெல்லியடி, கட்டைவேலி மற்றும் உடுப்பிட்டி உப அலுவலகங்களில் கட்டணங்களைச் செலுத்தி கழிவகற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் ஊழியர்களிடம் பற்றுச்சீட்டைக் காண்பித்து கழிவகற்றல் சேவையை சபையிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

புயலுக்கு பின்னராக ஏற்படும் அனர்த்தங்களை அதாவது நோய்ப் பரவல் மற்றும் நுளம்பு பெருக்கம் ஆகியவற்றிலிருந்து மக்களை மீட்டெடுக்கும் பொறுப்பினை சபையும் கொண்டுள்ளது. மக்கள் இவ்வாறான செயற்பாடுகளுக்கு பூரண ஒத்துழைப்பை வழங்கி உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அத்துடன் தங்கள் வீடுகளுக்கு முன்னால் காணப்படும் கழிவுகளுக்கு தாங்களே பொறுப்பாளியாவீர்கள் என்பதை தாங்கள் நன்கு அறிவீர்கள் எவராயினும் ஒருவர் முறையற்ற விதத்தில் கழிவுகளை வீதியில் வீசுவதை அவதானித்தால் உரிய ஆதாரங்களுடன் சபைக்கு முறையிடுமாறு கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவித்தார். (8-60)

# முல்லைத்தீவிற்குச் செல்லும் வீதி தற்காலிகமாக புனரமைக்கப்பட்டுள்ளது



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு நகருக்கான தற்காலிக பிரதான வீதியாக புதுக்குடியிருப்பு கேப்பாப்பிலவு வீதியில் உள்ள பாரிய குழி தற்காலிகமாக புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலம் வெள்ள அனர்த்தம் காரணமாக இரண்டாகப் பிழந்து கடுமையாக சேதமடைந்துள்ளமையால் குறித்த வீதி முற்றிலும் முடக்கப்பட்டுள்ளது.

எனவே விசுவமடு, புதுக்குடியிருப்பு பகுதிகளிலிருந்து பரந்தன் வீதியூடாக முல்லைத்தீவு நோக்கிப் பயணம் செய்பவர்கள் மாற்று வழியாக கேப்பாப்பிலவு வீதியைப் பயன்படுத்துமாறு முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் அறிவித்திருந்தனர்.

இதனையடுத்தே குறித்த வீதி தற்காலிகமாக புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. (8-299)

# கட்டைக்காட்டில் வீசிய கடும் காற்றால் மீன்பிடி உபகரணங்கள் சேதம்

(அராலி)

நாட்டில் ஏற்பட்டுள்ள சீரற்ற காலநிலையால் மீனவர்களுடைய மீன்பிடி உபகரணங்கள், வாடிகள் என்பன பலத்த சேதமடைந்துள்ளன.

யாழ். வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு பகுதியில் மீனவர்களுடைய மீன்பிடி உபகரணங்கள், சேதமடைந்துள்ளதுடன் மீன்பிடி வாடிகளும் தூக்கி வீசப்பட்டுள்ளன.

கடற்பகுதிகளில் வீசிய கடுமையான காற்றால் மீனவர்களுடைய மீன்பிடி வலைகள் மணலால் மூடப்பட்டுள்ளன. சிலருடைய மீன்பிடி உபகரணங்கள் கடலோடு அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இவ்வாறு கடலோடு அடித்துச் செல்லப்பட்ட மீன்பிடி உபகரணங்களை மீனவர்கள் தேடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-104)

# சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம் நடத்தும் சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற பொன் விழா மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கருவி நிறுவனத் தலைவர் க. சர்வானந்தா தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதமவிருந்தினராக மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.சுதர்சன், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி பிரதேச செயலாளர் எப்.சி.சத்தியசோதி மற்றும் சாவகச்சேரி நகராட்சி மன்ற தவிசாளர் வி.ஸ்ரீ.பிரகாஸ் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக தெல்லிப்பழை ஏ.வி.ஆர் அறக்கட்டளை நிறுவுனர் லயன். பி.சிவகுமார், வடமாகாண கைத்தொழில் அபிவிருத்தி சங்கத் தலைவர் ரி.சுரேஸ்குமார் மற்றும் கொழும்பு இராமகிருஸ்ணமிஷன் இசை ஆசிரியர் வி. சரவணபவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (3)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | மட்டுவில் ரூபா | வவுனியா ரூபா |
|---|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 600 | 400 | 800 | 400 | 400 | 190 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 180 | 250 | 190-200 | 300 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 250 | 400 | 400 | 150 |
| தக்காளி | 600 | 800 | 800 | 800 | 600 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 200 | 200 | 120 | 200 | 80 |
| கோவா | 300 | 450 | 200 | 300 | 180 | 110 |
| கரட் | 500 | 450-500 | 300 | 1200 | 1000 | 750 |
| பூசணி | 120 | 120 | 50 | 160 | 100 | 60 |
| புடோல் | 300 | 350 | 120 | 300 | 200 | 300 |
| வாழைக்காய் | 50 | 80 | 50 | 200 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 300-350 | 200 | 400 | 200 | 250 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 150 | 250 | 200 | 170 |
| பாகற்காய் | 800 | 1200 | 850 | 1400 | 600 | 400 |
| வெண்டக்காய் | 300 | 300 | 120 | 400 | 250 | 200 |
| கருணைக்கிழங்கு | 350 | 250 | 200 | 300 | -- | 310 |
| பயற்றங்காய் | 600 | 800 | 1200 | 300 | -- | 400 |
| லீக்ஸ் | 800 | 1000 | 250 | 1200 | -- | 600 |
| பீற்றூட் | 200 | 450 | 120 | 400 | 400 | 200 |
| கறிமிளகாய் | 1200 | 1000 | 600 | 1000 | 1100 | 600 |
| முருங்கைக்காய் | -- | -- | 400 | -- | -- | -- |
| போஞ்சி | 800 | 800 | 400 | 1000 | -- | 500 |
| கத்தரிதம்புள்ள | 500 | 300 | 120 | 300 | -- | -- |
| கீரை - 1 பிடி | 150 | 80-160 | 80 | 200 | -- | 120 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 600 | 500 | 1000 | 450 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 160 | 130-160 | -- | 150 |
| இராசவள்ளி | 500 | 850 | 500 | 800 | -- | 475 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | -- | -- | -- |
| முள்ளங்கி | 250 | -- | 150 | 200 | 200 | 80 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 80 | -- | 40 |
| வல்லாரை | 60 | -- | 50 | 100 | -- | 40 |
| ஈரப்பலா | 150 | 50-150 | 120 | 120 | -- | 80 |

# மூழ்கிய பயிர்களை சேதப்படுத்தும் யானைகள்

## விவசாயிகள் கவலை



(நெளுக்குளம்)

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக விவசாய நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

இந்த நிலையில் முல்லைத்தீவில் நீரில் மூழ்கியுள்ள விவசாய நிலங்களில் யானைகள் கூட்டம் கூட்டமாக நின்று பயிர்களை சேதப்படுத்துகின்றன.

இதனால் வெள்ளத்தில் மூழ்கிய பயிர் நிலங்கள் மேலும் காட்டு யானைகளால் அழிவடையும் மோசமான நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (8-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரிடருக்கு மத்தியில் மல்வத்து ஓயாவில் குழந்தைகளுடன் குதித்த தாய்

(அநுராதபுரம்)

இயற்கை சீற்றங்களால் நாட்டில் பதிவாகி வரும் தொடர் உயிரிழப்புகளுக்கு மத்தியில் தாயொருவர் தனது இரு பிள்ளைகளுடன் நேற்று தனது உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சித்துள்ளார்.

அநுராதபுரம், மல்வத்து ஓயா, மிஹிந்துபுர பாலத்தின் மேலிருந்து மல்வத்து ஓயாவில் குதித்து அவர் இவ்வாறு உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சித்துள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மொரட்டுவ பிர தேசத்தில் வசிக்கும் 40 வயதுடைய குறித்த தாயார் 8 வயதுடைய மகன் மற்றும் 4 வயதுடைய தனது இரு பிள்ளைகளுடன் மல்வத்து ஓயாவில் குதித்துள்ளார். குறித்த பெண் தற்போது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் பிள்ளைகள் இருவரையும் காணவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமல் போன இரு பிள்ளைகளை தேடி சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (நி)


## பணிப்பெண் தேவை

வயோதிபப் பெண் பராமரிப்பும்
சிறிய வீட்டுப் பணிகளுக்கும்
தங்கியிருந்து பணிசெய்யக்கூடிய
பணிப்பெண் தேவை
உணவு,தங்குமிட வசதிகளுடன்
ரூபா 45,000 தரப்படும்
(வேலைக்கு ஏற்ப மாறுபடலாம்)
உடல் ஆரோக்கியம் உள்ளவர்கள்
விரும்பப்படும் இடம்: நெல்லியடி
(C-4469)
075 484 71 71


# கண்டியில் 50,719 பேர் பாதிப்பு 532 வீடுகள் முழுமையாக சேதம்

(கண்டி)

நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் காரணமாக கண்டி மாவட்டம் வரலாறு காணாத பாதிப்புக்களை சந்தித்துள்ளது. 50, 719 நபர்களின் 532 வீடுகள் முற்றாகவும், 4,451 வீடுகள் பகுதி அளவில் பாதிக்கப்பட்டுள்ளன.

கண்டி மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலைய அறிக்கையின் படி கடந்த முதலாம் திகதி மாலை வரை பதிவான தகவல்களின் அடிப்படையில் குறைந்தது 131 பேர் மரணித்தும் 174 இற்கு மேற்பட்டவர்கள் காணாமலும் போயுள்ளனர்.

சில இடங்களில் தேடுதல் பணிகள் கைவிடப்பட்டுள்ளன. குறிப்பாக அக்குறணைப் பிரதேச சபைப் பிரிவிலுள்ள அளவத்துகொடை ரம்புக்கே -எல என்ற கிராமத்தின் பெரும்பகுதி முற்றாக புதைந்துள்ளது.

இதில் சுமார் 40 இற்கும் மேற்பட்ட வீடுகள் புதையுண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்விடத்தில் தேடும் பணிகள் தற்போது கைவிடப்பட்டுள்ளன. மண் சரிவு ஏற்பட்ட இடத்தில் இருந்து ஒரு கிலோ மீற்றருக்கும் மேற்பட்ட தூரம் வரை மண் அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

அதே நேரம் கண்டி மாவட்ட இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அறிக்கையின் படி 21,927 குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதில் மொத்தம் 50,719 நபர்கள் பாதிப்படைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## பெறுகைகளுக்கான திகதி மாற்ற அறிவிப்பு

சேவைகள்:

1.கல்விசார் மற்றும் அலுவலக தேவைகளுக்காக அழைப்பின் பேரில் (Oncall) ,அல்லது வாடகை (Hiring) அடிப்படையில் வழங்குவதற்கான கேள்வி விண்ணப்பம் கோரல் (Invitation for Bid) -2026

2.வாகன சுத்திகரிப்பு மற்றும் பராமரிப்புச் சேவை - 2026

மேற்படி சேவைகளுக்கான பெறுகைகள் கடந்த, 15.11.2025 அன்று வெளியிடப்பட்ட பத்திரிகை விளம்பரத்தினூடாகக் கோரப்பட்டிருந்து. அதன்படி பெறுகைக்கான முடிவு திகதி 01.12.2025 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆயினும் நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்த நிலைமைகளைக் கருத்திற் கொண்டு பெறுகைகளைப் பெற்றுக்கொள்வதற்கான முடிவுத் திகதி கீழ்வருமாறு கால நீட்டிப்பு செய்யப்படுகின்றது என்பதனை அறியத்தருகின்றோம்.

- ❑ ஏல ஆவணம் பெறும் கடைசி திகதி: 05.12.2025 வரை
- ❑ ஏல திறப்பு திகதி: 08.12.2025 பி.ப 02.30 மணி

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் (பொதுநிர்வாகம்), யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அவர்களிடமிருந்து தொலைபேசி இலக்கம் (021-222 6517) மூலமாகவோ அல்லது நேரடியாகவோ பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர், பெறுகைக்குழு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
03.12.2025
(C-4470)

## 19ம் ஆண்டு நினைவுச் சங்கமம்

புவித்துவம் 08.06.1931
அமரத்துவம் 14.12.2005

### அமரர்: செல்லையா தம்பித்துரை

(ஓய்வு பெற்ற நீதிமன்ற முதலியார், கொழும்பு துறைமுக அதிகாரசபை அத்தியட்சகர், மஞ்சவனப்பதி முருகன் ஆலய நிர்வாகசபை உபதலைவர்)

திதி: சதுர்த்தசி



வாழ்வின் உன்னதத்தை உணர்த்திய உத்தமரே!
வாழ்க்கை என்னும் சக்கரத்தில் நீந்தி எம்மைக் காத்தவரே!
காலமெல்லாம் தங்கள் வாழ்க்கை பதிவுகளை பதிந்தவரே!
நாளெல்லாம் உம் நாமம் எம் நாவில் உறைய வைத்தவரே!

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

தகவல்
குடும்பத்தினர்

## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்

**10/4, உடுக்கியவளை பிள்ளையார் கோவில் வீதி, வட்டாரம் -10**

வலிகாமம் மேற்கு பிரதேச சபை வட்டுக்கோட்டை உப அலுலகத்திற்குட்பட்ட வட்டாரம் 10. உடுக்கியவளை பிள்ளையார் கோவில் வீதியிலுள்ள இல: 10/4, ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் குமாரசிங்கம் பெண் கமலாதேவி என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் ஒரு பகுதிக்கு வேலுப்பிள்ளை குமாரசாமி ஆகியவர் யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றின் பிரிவிடல்/ 970 வழக்கின் இறுதித்தீர்வையின் பிரகாரம் சொந்தமும் உரித்துமுடையவரானார்.

வேலுப்பிள்ளை இராஜேந்திரம் ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு K.மகாதேவன் முகதாவில் 465/13.02.1972ஆம் இலக்க உறுதியால் குறித்த வேலுப்பிள்ளை கும குமாரசாமி ஆகியவரிடமிருந்து மேற்படி ஆதனத்தினை அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

ஞானாம்பிகை சிவலோகநாதனும்,புஸ்பாதேவி இராஜேந்திரமும், சறோஜினி தேவி இராஜேந்திரமும் ஆகியவர்கள் மேற்படி ஆதனத்தில் ஒரு பகுதியானது குறித்த 465/13.02.1972ஆம் இலக்க உறுதியின்படி காலஞ்சென்ற தமது பெற்றோர் வேலுப்பிள்ளை இராஜேந்திரமும் பெண் இராஜேந்திரம் சந்திரமதியினதும் சொந்தமும், நிந்தமுமாயிருந்தது எனவும், குறித்த ஆதனம் 22.03.1978 ஆம் திகதி தமது தந்தையாரால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற வலய பிரசித்த நொத்தாரிசு நாகநாதபிள்ளை ஏகாம்பரம் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 5540 ஆம் இலக்க இறுதி விருப்பாவணத்தின்படி அவரின் பிள்ளைகளான இராஜேந்திரம் பத்மாஜினிக்கும், தங்களுக்கும் தமது தாயாரான காலம் சென்ற இராஜேந்திரம் பெண் சந்திரமதியின் சீவிய உரித்திற்கு அமைவாக சேரும்படியாக குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், அதனைத் தொடர்ந்து தமது தாயாரான இராஜேந்திரம் பெண் சந்திரமதி காலஞ் சென்றுவிட்டார் எனவும், அதனைத் தொடர்ந்து குறித்த பிள்ளைகளில் இராஜேந்திரம் பத்மாஜினியும் காலஞ்செல்ல அவரின் பங்கும், தங்களை வந்தடைந்ததாகவும், குறித்த ஆதனத்தை தாங்கள் மூவரும் கூட்டு ஆட்சி செய்து வருவதாகவும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு வேலுப்பிள்ளை பொன்னம்பலம் முகதாவில் 977/19.08.2011ஆம் இலக்கத்தில் பிரகடன உறுதி யொன்றினை நிறைவேற்றியிருந்தார்கள்.

குமாரசிங்கம் குலதுங்கரும், குமாரசிங்கம் ஜெயசீலனும் ஆகியவர்கள் பிரசித்த நொத்தாரிசு வேலுப்பிள்ளை பொன்னம்பலம் முகதாவில் 1217/23.05.2014ஆம் இலக்க உறுதியால் குறித்த ஞானாம்பிகை சிவலோகநாதனும், புஸ்பாதேவி இராஜேந்திரமும் ஆகியவர்களிடமிருந்து அவர்களின் சீவிய உரித்திற்கமைவாக மேற்படி ஆதனத்தினை நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவராவரானார்கள்.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை உள்ளடக்கிய முழு ஆதனத்தில் மற்றொரு பகுதிக்கு குலோத்துங்கசுந்தரம் குமாரசிங்கம் பெண் கமலாதேவி ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு நா.ஏகாம்பரம் முகதாவில் 4653/22.11.1972ஆம் இலக்க உறுதியால் குறித்த வேலுப்பிள்ளை இராசேந்திரமும் பெண் சந்திரமதியும் ஆகியவர்களிடமிருந்து சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்கள், குறித்த குலோத்துங்கசுந்தரம் குமாரசிங்கம் பெண் கமலாதேவி காலஞ்செல்ல குறித்த ஆதனம் குமாரசிங்கம் குலதுங்கரும், குமாரசிங்கம் முகுந்தனும், குமாரசிங்கம் ஜெயசீலனும் ஆகியவர்களை முதுசமுமாக வந்த்டைந்த்து.

மகேஸ்வரன் மஞ்சுளா ஆகியவர் பிரசித்த நொத்தாரிசு தாட்சாயினி மனோகரன் முகதாவில் 71/29.01.2024ஆம் இலக்க உறுதியால் குறித்த குமாரசிங்கம் குலதுங்கரும், குமாரசிங்கம் முகுந்தனும், குமாரசிங்கம் ஜெயசீலனும், இராஜேந்திரம் புஸ்பாதேவியும் ஆகியவர்களிடமிருந்து மேற்படி இரு பகுதி ஆதனங்களையும் அறுதியாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த ஆதனத்தின் விபரம் வருமாறு:
பெயர்: "உடுக்கியவளை"
இறை: வட்டுக்கோட்டை மேற்கு
விஸ்தீரணம்: நில.பர.இல 06 குளி 15.81
எல்லைகள்: கிழக்கு - சசிதரன் சுலோஜனாவின் ஆதனம், வடக்கு-ஒழுங்கை, உடுக்கியவளை பிள்ளையார் கோவிலின் ஆதனம், மேற்கு-சுப்பிரமணியம் பூபதியின் ஆதனம், தெற்கு-சுப்பிரமணியம் பூபதியின் ஆதனம் மற்றும் இராசநாயகம் சாருஜனின் ஆதனம் மற்றும் பாதை

குறித்த மகேஸ்வரன் மஞ்சுளா ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது மகேஸ்வரன் மஞ்சுளா ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தவிசாளர்/செயலாளர் வலிகாமம் மேற்கு பிரதேசசபை
(6051)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

## ஹொங்கொங்கில் தீ விபத்து உயிரிழப்பு 151 ஆக உயர்வு



(ஹொங்கொங்)

ஹொங்கொங் அடுக்கு மாடி குடியிருப்பில் கடந்த 27ஆம் திகதி இடம்பெற்ற தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளது.

இந்தத் தீ விபத்தில் ஏற்கனவே 128 பேர் உயிரிழந்த நிலையில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

அதன்படி, இதுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 151 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை 104 பேரின் உடல்கள் இன்னும் அடையாளம் காணப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


அதேவேளை, தீ விபத்தில் 100இற்கும் மேற்பட்டோர் மாயமான நிலையில் அடுக்குமாடி குடியிருப்பில் தொடர்ந்து மீட்புப் பணிகள் நடைபெற்று வருவதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (நி)



# ரஷ்யா உக்ரை

## நிறுத்தும் முயற்சியி

## அமெரிக்க



**(வோஷிங்டன்)** ••••••

**ரஷ்யா - உக்ரை அமைதி ஒப்பந்தம் நிர்வாகம் மிகவும் இருக்கிறது என வெள் பத்திரிகை செயலாள தெரிவித்துள்ளார்.**

ரஷ்யா - உக்ரைன் இடையேயான போர் 3 ஆண்டுகளை கடந்துவிட்டது.

போரை நிறுத்த அமெரிக்கா ஜனாதிபதி ட்ரம்ப் தீவிர முயற்சி செய்து வருகிறார்.


ரஷ்யா - உக்ரைன் இடையேயான போரை முடிவுக்கு கொண்டு வர 28 அம்சங்களைக் கொண்ட அமைதித் திட்டத்தை ட்ரம்ப் பரிந்துரைத்தார்.

ட்ரம்ப் பரிந்துரைகள் ரஷ்யாவுக்கு சாதகமாகவும், உக்ரைனுக்கு பாதகமாகவும் இருப்பதாக உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி அதிருப்தி தெரிவித்திருந்தார்.

அவரை சமாதானப்படுத்தும் முயற்சியில் அமெரிக்கா தீவிரம் காட்டி வருகிறது.

இந்த நிலையில், அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் மார்கோ ரூபியோ, உக்ரைன் தேசிய பாதுகாப்பு

## வர்த்தக கொந்தளிப்புக்கு மத்தியில் பிரான்ஸ் ஜனாதிபதி சீனா பயணம்



(பாரிஸ்)

பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மக்ரோன் இந்த வாரம் தனது நான்காவது அரச பயணமாக சீனாவுக்குச் செல்லவுள்ளார்.

உலகளாவிய வர்த்தக கொந்தளிப்பான காலகட்டத்தில், உலகின் இரண்டாவது பெரிய பொருளாதாரமான சீனாவை நம்பி, ஐரோப்பா பீஜிங்கிலிருந்து வரும் பொருளாதார மற்றும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களை சமநிலைப்படுத்த முயற்சிக்கும் நிலையில் இந்தப் பயணம் அமைந்துள்ளது.

கடந்த காலங்களில் சீனாவை கையாள்வதில் ஒரு வலுவான ஐரோப்பிய முன்னணியை முன்னிறுத்த மக்ரோன் முயன்றார்.

அதேநேரத்தில் வர்த்தகம், பாதுகாப்பு மற்றும் இராஜதந்திர உறவுகளை சோதிக்கும் பீஜிங்கின் வளர்ந்து வரும் உறுதிப்பாட்டை பகைத்துக் கொள்ளாமல் அவதானமாக இருந்தார் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

இந்த நிலையில் புதன்கிழமை பீஜிங்கிற்கு விஜயம் மேற்கொள்ளும் மக்ரோன் நாளை வியாழக்கிழமை தலைநகரில் ஜனாதிபதி ஜி ஜின்பிங்கைச் சந்திப்பார் என்றும் கூறப்படுகிறது.

அதேநேரம், பிரித்தானியப் பிரதமர் கெய்ர்ஸ்டார்மரும் ஜேர்மன் ஜனாதிபதி பிரீட்ரிக் மெர்ஸும் அடுத்த ஆண்டு தொடக்கத்தில் சீனாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளனர். (நி)



## போ

## 17

(சிங்

போ

ளுக்கு

நீக்கு

வழிவ

கூறி

சர்

பொரு

எதிர்ப்

கிழக்

பொரு

கடுமை

கொண

ஒன்று

போ

விற்ப

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# ...ரைன் போரை ...சியில் முன்னேற்றம்

## ...ங்கா தகவல்

•••••••••••••••••••
...உக்ரைன் இடையேயான ...ந்தம் குறித்து ட்ரம்ப் ...கவும் நம்பிக்கையுடன் ...வெள்ளை மாளிகையின் ...லாளர் கரோலின் லீவிட் ...ர்.



...க்ரைன் ...திருப்தி ...ம் முயற் ...ட்டி வரு ...மெரிக்க ...மார்கோ ...பாதுகாப்பு கவுன்சில் செயலாளர் ருஸ்டெம் உமெரோவை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.


பின்னர் அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது: ரஷ்யா-உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான ஒப்பந்தம் தொடர்பாக உக்ரைனுடனான பேச்சுவார்த்தைகள் பயனுள்ளதாக இருந்தன.

இது சண்டையை முடிவுக்குக் கொண்டுவரும் விதிமுறைகள் மட்டுமல்ல. இது உக்ரைனின் நீண்ட கால செழிப்புக்கான விதிமுறைகளைப் பற்றியது.

இன்று நாம் அதைக் கட்டியெழுப்பினோம் என்று நினைக்கிறேன்.

ஆனால் இன்னும் நிறைய வேலை செய்ய வேண்டியிருக்கிறது" என்று அவர் தெரிவித்தார். (நி)

## 2 படகுகள் மூழ்கியதில்
## பெருவில் 12 பேர் உயிரிழப்பு



(லிமா)

தென் அமெரிக்க நாடான பெரு நாட்டில் நிலச்சரிவு காரணமாக இரண்டு படகுகள் மூழ்கின.

இதில் 3 குழந்தைகள் உட்பட 12 பேர் உயிரிழந்தனர், பலர் மாயமாகி உள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

அந்த நாட்டில் பாயும் அமேசான் ஆற்றுப் படுகையின் படகு துறையில் நிறுத்தப்பட்டிருந்த படகுகள் நீரில் மூழ்கின. இந்தச் சம்பவம் அங்குள்ள உகாயாலி பகுதியில் நடைபெற்றுள்ளது.

இதை அந்நாட்டு காவல்துறை உறுதி செய்துள்ளதாக அமெரிக்காவில் செயல்படும் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

மூழ்கிய படகுகளில் எத்தனை பேர் இருந்தனர் என்பது குறித்த உறுதியான தகவல் இன்னும் வெளியாகவில்லை. இருப்பினும் அதில் ஒரு படகில் சுமார் 50 பேர் இருந்ததாக களத்தில் இருந்து தகவல் கிடைத்துள்ளது.

இதுவரை உயிரிழந்தவர்களில் 9 பேரின் உடல் மீட்கப்பட்டுள்ளன.

ஆற்றில் பாயும் நீரின் வேகம் மற்றும் நீர் சுழற்சி காரணமாக மீட்புப் பணி மிகவும் சவாலாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது வெள்ளப்பெருக்கு ஏற்படும் காலம் என்பதாலும், சம்பவ இடத்தில் பனிமூட்டம் இருப்பதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர். (நி)

# போதைப்பொருள் குற்றவாளிகள்
## 17 பேருக்கு சிங்கப்பூரில் மரண தண்டனை

(சிங்கப்பூர்)

போதைப்பொருள் குற்றங்களுக்கு மரண தண்டனையை நீக்குவது கடும் விளைவுகளுக்கு வழிவகுக்கும் என சிங்கப்பூர் அரசு கூறி வருகிறது.

சர்வதேச அளவில் போதைப் பொருள் கடத்தலுக்கு கடுமையான எதிர்ப்பு நிலவி வருகிறது. தென் கிழக்கு ஆசியாவில் போதைப் பொருள் கடத்தலுக்கு எதிராக மிக கடுமையான சட்டங்களை கொண்ட நாடுகளுள் சிங்கப்பூரும் ஒன்று.

போதைப்பொருள் கடத்தல், விற்பனை, அதனை உற்பத்தி செய்தல் போன்றவற்றில் ஈடுபடுபவர்களுக்கு மரண தண்டனை வரை வழங்கப்படுகிறது. அதன் அளவுக்கு ஏற்ப தண்டனை உறுதிசெய்யப்படும்.


அந்த வகையில் கடந்த 2 நாட்களில், போதைப் பொருள் கடத்திய 3 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இதன்மூலம் இந்த ஆண்டில் மரண தண்டனை பெற்றவர்களின் எண்ணிக்கை 17 ஆக உயர்ந்துள்ளது. 2003 ஆம் ஆண்டில் இருந்து இது வரையிலான 22 ஆண்டுகளில் இல்லாத வகையில் இது அதிக எண்ணிக்கையாகும்.

சிங்கப்பூரில் போதைப் பொருள் குற்றங்களுக்கு மரண தண்டனை விதிப்பது என்பது அரசியல் சாசனத்திற்கு எதிரானது என சமூக ஆர்வலர்கள் சிலர் கூறி மனுத்தாக்கல் செய்துள்ளனர்.

இந்த வாரத்தில், அது விசாரிக்கப்படும் என தெரிகிறது.

எனினும், போதைப் பொருள் குற்றங்களுக்கு மரண தண்டனையை நீக்குவது என்பது கடும் விளைவுகளுக்கு வழிவகுக்கும் என்று சிங்கப்பூர் அரசு தொடர்ந்து கூறி வருகிறது. (நி)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோம்பாவில் பாலம் சேதம் போக்குவரத்துத் தடை



(நெளுக்குளம்)

புதுக்குடியிருப்பு இரணைப்பாலை பிரதான வீதியில் அமைந்துள்ள சிறி சுப்ரமணிய வித்தியாசாலைக்கு அருகாமையில் அமைந்துள்ள கோம்பாவிலுக்கு செல்லும் பாலம் முழுமையாக சேதமடைந்து காணப்படுகிறது.

அண்மைய நாட்களாக பெய்த கனமழையின் தாக்கத்தால் குறித்த பாலம் பிரதான வீதியில் இருந்து இரு துண்டுகளாக பிரிந்து, அதன் ஊடாக நீர் வேகமாகப் பாய்ந்து செல்கிறது.

இதனால் குறித்த வீதியூடான போக்குவரத்து முற்றிலும் தடைப்பட்டுள்ளது.

எனவே உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து, பாலத்தைச் சீரமைக்க துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-299)


# மின்சாரக் கம்பிமேல் விழுந்தது பனை மரம்

(நெளுக்குளம்)

முல்லைத்தீவு குமுழமுனை கிராமத்தில் மழையுடன் வீசிய காற்றில் காணி ஒன்றில் நின்ற பனை மரம் வீதிக்கு குறுக்காக மின் இணைப்பு கம்பியில் வீழ்ந்துள்ளது.

இதனால் போக்குவரத்துக்கு பாதிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் உடனடியாக விரைந்து செயற்பட்ட குமுழமுனை இளைஞர்கள் பாதுகாப்பான முறையில் வீழ்ந்த பனை மரத்தினை வெட்டி அகற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-299)



# வெள்ள அனர்த்தத்தில் சிக்கிய விவசாயிகள் மீட்டெடுத்த குமுழமுனை மக்கள்




(நெளுக்குளம்)

அண்மையில் பெய்த கனமழை காரணமாக முல்லைத்தீவு குமுழமுனை நித்தகைகுளம், ஆண்டான் குளம் கிராமத்தில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட நிலையில் வயலுக்குச் சென்ற விவசாயிகள் வீடுவந்து சேராத நிலையில் அவர்களது தொலைபேசி இணைப்புகளும் துண்டிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து குறித்த அனர்த்தத்தில் சிக்கிய விவசாயிகளை அளம்பில் அன்னை வேளாங்கன்னி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், மயூரன், அருள்ராஜ் ஆகியோரின் படகின் உதவியுடன் குமுழமுனை மக்கள், இளைஞர்கள் இணைந்து வெள்ளத்தில் சிக்கிய விவசாயிகளை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர்.

குறித்த நடவடிக்கையில் ஒரு சிறுவன் உட்பட ஏழு விவசாயிகள் காப்பாற்றப்பட்டு மீட்டெடுக்கப்பட்டனர்.

ஆண்டுதோறும் இப்பகுதியில் தொடர்ச்சியாக வெள்ள அனர்த்தம் ஏற்பட்டு வருவதனால் இந்த உயிர்காப்பு நடவடிக்கைக்காக என்ஜின் படகு ஒன்றும், பாதுகாப்பு கவசங்களும் அரசினால் இலவசமாக வழங்கப்பட வேண்டும் என மீட்பு பணியின் பின்னர் குமுழமுனை மக்கள் கோரிக்கை விடுத்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (8-299)



**மானிப்பாய் சங்குவேலி ஞான வைரவர் ஆலயத்தில் பன்னிரு திருமுறை முற்றோதல் நிகழ்வானது இராசையா திருவாதவூரன் தலைமையில் இடம்பெற்று வருகிறது.**

# இன்று ஒரு தகவல் 494



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## மூன்று இடையூறுகள்!

ஒரு பெரியவரிடம் பேசிக்கொண்டிருந்தேன். அவர் சொன்னார். "இரண்டு நல்லவனுக்கு மூன்று வழி! ஒரு நல்லவன் - ஒரு கெட்டவனுக்கு இரண்டு வழி! இரண்டு கெட்டவனுக்கு ஒரே வழி!" என்றார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. இதற்கு என்ன விளக்கம்? என்றேன். அதற்கு அவர் விளக்கம் கொடுத்தார், அதாவது ஒரு ஒற்றையடிப் பாதையிலே எதிரும் புதிருமாக இரண்டுபேர் வந்துகொண்டிருக்கிறார்கள். அது ஒரு வரப்பு என்று வைத்துக்கொள்ளுங்கள். அது ஒரு பெரும் பாதையை விட்டு விலகாமல் நேராக வந்தால் மோதவேண்டியதுதான். எதிரும் புதிருமாக வந்துகொண்டிருக்கின்ற அந்த இரண்டு பேருமே நல்லவர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள்.

அவர் என்ன செய்வார். இவர் நேராக பாதையிலே வரட்டும் என்று அவர் வரப்பை விட்டு விலகி கீழே இறங்கி நடந்து வருவார்.

இவர் என்ன செய்வார். அவர் பாதையிலே வரட்டும் என்று இவர் விலகி கீழே இறங்கி நடந்து வருவார்.

அவருக்காக இவர் விட்டுக் கொடுக்கிறார். இவருக்காக அவர் விட்டுக் கொடுக்கிறார். ஆக அவர் நடுவிலே ஏற்கனவே உள்ள பாதை ஒன்று. மொத்தம் மூன்று.

அதுதான் இரண்டு நல்லவனுக்கு மூன்று வழி என்று சொல்வது.

ஒரு நல்லவன் - ஒரு கெட்டவனுக்கு இரண்டு வழி. இது எப்படி என்றால். ஒரே வரப்பிலே எதிரும் புதிருமாக வரும் இரண்டு பேரிலே ஒருவன் நல்லவன். ஒருவன் கெட்டவன்.

நல்லவன் வரப்பை விட்டு கீழே இறங்கி எதிரிலே வருபவனுக்கு வழிவிடுவான்.

கெட்டவன். வரப்பை விட்டு கீழே இறங்க மாட்டான். அவன் இறங்கட்டுமே நாம் எதற்கு இறங்க வேண்டும் என்று இருந்து விடுவான்.

இப்போது இரண்டு பாதைதான் உண்டு.

இதுதான் ஒரு நல்லவன் - ஒரு கெட்டவனுக்கு இரண்டு வழி என்று சொல்வது.

இரண்டு கெட்டவனுக்கு ஒரே வழி என்று சொல்வது எப்படி தெரியுமா? ஒரே வரப்பிலே எதிரும் புதிருமாக வரும் இரண்டு பேருமே கெட்டவன் என்று வைத்துக்கொள்ளுங்கள். இரண்டு பேருமே வரப்பை விட்டு கீழே இறங்கமாட்டார்கள்.

இவன் இறங்கட்டுமே என்று அவன் இருப்பான். அவன் இறங்கட்டுமே என்று இவன் இருப்பான். இரண்டு பேரும் ஒரே பாதையிலேதான் வந்து கொண்டிருப்பார்கள்.

இதுதான் இரண்டு கெட்டவனுக்கு ஒரே வழி என்று சொல்வது.

இப்போதுதான் அந்தப் பெரியவர் சொன்ன வார்த்தைக்கு அர்த்தம் புரிந்தது. அவரே இன்னொரு விடயத்தையும் சொன்னார். அதாவது

நமக்கு வரும் இடையூறுகள் மூன்று வகை என்றார். அது எப்படி என்று கேட்டேன். நாம் ஒரு காரியத்தைத் தொடங்கிறோம் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதற்கு மூன்று வகையிலே இடைஞ்சல் வரலாம்.

தம்மாலேயே வரும் இடைஞ்சல் ஒரு வகை. இது ஆத்யாத்மிகம்!

நம்மைத் தவிர மற்றவர்களாலே வரும் இடைஞ்சல் ஒருவகை. இது ஆதிபௌதிகம். இயற்கையாக வரும் இடைஞ்சல் அதற்குப் பெயர் ஆதி தெய்வீகம். மூன்றாவது நமக்கு பிடித்த ஒரு நல்ல சினிமா படத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த சமயம் பார்த்து நமக்கு வயிறு வலிக்குது. இது நம்மிடம் இருந்தே வரும் இடைஞ்சல்.

ஆர்வமாக அந்தப் படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த சமயம் பார்த்து பக்கத்திலே இருக்கின்றவர்கள் காச் மூச் என்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். இது அடுத்தவர்களாலே வரும் இடைஞ்சல். அந்த சமயம் பார்த்து இடி- மின்னல், பூகம்பம். கரண்ட் போய்விடுது.

இது இயற்கை உண்டு செய்யும் இடைஞ்சல். இப்படி மூன்று வகையாகவும் இடைஞ்சல் வரக்கூடாது என்பதற்காகத்தான் பெரியவர்கள் சாந்தி - சாந்தி -சாந்தி என்று மூன்று தடவை சொல்கிறார்கள். இந்த மூன்று இடைஞ்சலும் அமைதியாக இருக்க வேண்டும் என்று அர்த்தம்.

ஆத்யாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதெய்வீகம்

நமது "இன்று ஒரு தகவலிலேயே இந்த மூன்று இடைஞ்சலும் இருக்கிறது! எப்படி தெரியுமா?

7.35இற்கு உங்கள் ரேடியோவை திருப்புகிறீர்கள் இல்லையா? அது நீங்களாக ஏற்படுத்துகின்ற இடைஞ்சல்!

சரியாக அந்த நேரத்திற்கு நான் பேச ஆரம்பிக்கிறேன் இல்லையா? இது அடுத்தவர்களாலே உங்களுக்கு ஏற்படுகின்ற இடைஞ்சல்!"

சரியாக அந்த நேரத்திற்கு நான் பேச ஆரம்பிக்கிறேன். இல்லையா? இது அடுத்தவர்களாலே உங்களுக்கு ஏற்படுகின்ற இடைஞ்சல்.

அந்த நேரம் பார்த்து நமது ஊரில் கரண்ட் "கட்" ஆகாமல் இருக்கு பாருங்கள்.

அது இயற்கை ஏற்படுத்துகின்ற இடைஞ்சல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரிடர் சிந்திக்க வைத்த முன்னாயத்தங்கள்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

புயல், கனமழை, வெள்ளம், வரட்சி இவையென்றுமே வட பகுதியை கலங்கவைக்கும் இயற்கை பேரிடர்கள். ஏறக்குறைய 9 மாதங்கள் வரட்சியில் தவிக்கும் வடபகுதி 3 மாதங்கள் காலபோகத்து மழையுடன் தன்னை குளிர்வித்துக் கொள்ளும். இருப்பினும் தற்போதைய காலங்களில் காலநிலை மாற்றத்தின் விபரீதம் நாம் எதிர்பார்த்ததை விட அதிகமானதாகவும் அதனால் ஏற்படும் இழப்புக்கள் கட்டுக்கடங்காமல் போவதனையும் நாம் கண்கூடாக காண்கின்றோம். மழையை நம்பிய காலபோகம் முன்பின் பெய்தலினால் பயிரழிவுக்குள்ளாவதும் அதனால் விவசாயப் பெருமக்கள் படுகின்ற இன்னல்களும் அளவிடமுடியாதவை. இம்முறை பெய்த காற்றுடன் கூடிய கனமழை பலபிரதேசங்களை மூழ்கடித்து விட்டது. அதனால் மக்கள் திக்குத்திசை தெரியாது தவித்த நிலைமையை உற்று அவதானித்தால் இவற்றுக்கான அனுமானிப்பு, முன்னறிவிப்பு என்பன அவசியம் தேவையென அனைவரும் உணரத் தலைப்பட்டுள்ளனர். பலவுயிர்களை, உடைமைகளை, சொத்துக்களை என அனைத்தையும் அள்ளியெடுத்துக் கொண்டு போகும் அசுர வெள்ளத்தின் வீச்சினை நாம் தற்போது உணர்ந்திருந்தும் இனிவருங்காலங்களில் அவசியமான முன்னாயத்தங்களை செய்தல் அவசியம் என வலியுறுத்தி நிற்கின்றன.

**வடபகுதிக்கான காலநிலை அறிவித்தல் மற்றும் ஆய்வு மையம் (Northern Region Climate forecasting and Research centre)**

வடபகுதிக்கென காலநிலை கணிப்பீடு மற்றும் துல்லியமாக எதிர்வு கூறுவதற்கான கட்டமைப்பு உடனடியாக நிறுவப்படல் வேண் டும். இதனது தேவை தற்போது நிகழ்ந்த பேரிடரின் மூலமும் உணர்ந்தறியப்பட்டுள்ளது. தேசிய ரீதியிலான வானிலை ஆய்வு மையத்தின் செயற்பாடுகளுடன் வடபகுதிக்கென சிறப்பான சேவையை வழங்குவதற்கு இம்மையம் அவசியம் உருவாக்கப்படல் வேண்டும். சில நேரங்களில் வானமிருண்டு காற்று சுழன்றடித்து தொலைத்தொடர்பு கேள்விக்குறியாகி மின்சாரம் தடைப்பட்ட போது தேசிய வானிலை ஆய்வு மையத்தின் இணையத்தளம் தகவல்களைப் பரிமாறமுடியாத நிலைமைக்குள் சென்றதனை கருத்தில் கொண்டு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துடன் இணைந்ததான இம் மையத்தினை வடபகுதியில் உருவாக்குவதற்கான தேவையினை அனைவரும் இணைந்து விடுத்தல் அவசியமானதாகும். வடபகுதிக்கான காலநிலை துல்லியமாக கணிக்கப்பட்டு மக்களுக்கு தொலைத்தொடர்பு வலையமைப்பினூடாக (Mobile network) அவ்வப்போது வழங்கப்படல் வேண்டும். இம்முறை மக்கள் என்ன நடக்கும் எனத் தெரியாமல் அங்கலாய்த்ததனை அனுபவத்தினூடே கண்டிருக்கின்றார்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்திலுள்ள புவியியல் துறையின் தலைவரான பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜாவின் தொடர்ச்சியான அனைவருக்கும் விளங்கத்தக்க வகையிலான துல்லியமான கணிப்பீடுடனான எதிர்வுகூறலை நாமனைவரும் கேட்டு பார்த்து பயனடைந்திருக்கின்றோம். தனியொருவனாக செய்த இந்த அர்ப்பணிப்பான சமூகப்பணி அனைவரினதும் பாராட்டுதலுக்குரியது. இவ்வாறான புலமையாளர்களை ஒன்றிணைத்து வானிலை கணிப்பீடு எதிர்வுகூறல் மற்றும் ஆய்வு என்பனவற்றில் மாணவர்களை பயிற்சியடையச் செய்வதற்கு அவசியம் இந்த மையம் உருவாக்கம் பெறல் வேண்டும். விவசாயிகளுக்கு, தொழில் முனைவோருக்கு, தொழிற்றுறையினருக்கு இந்நிறுவனத்தின் பங்களிப்பு அவசியம் தேவை. எம்முறவுகள் இதனை அதிமுக்கிய செயற்பாடாக கருதி அதனது உருவாக்கத்திற்கு பங்களிக்க வேண்டும். இவ்வாய்வு மையத்தை உலக நாடுகளிலுள்ள ஆய்வு மையங்களுடன் இணைப்பதன் மூலமாக நாம் அதிகம் பயனடைய முடியும்.

**யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பங்களிப்பு**

குறிப்பாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு வடமாகாணத்தின் அபி



விருத்தி மற்றும் செயற்றிட்டங்களில் முழுமையாகப் பங்களிக்கும் பொறுப்பு உண்டென்பதனை தவிர்த்துவிட முடியாது. கருத்தரங்குகளும் கண்காட்சிகளும் செயலமர்வுகளுடன் பல்கலைக்கழக பங்களிப்பை வரையறை செய்யாது பல்கலைக்கழகத்தில் இருக்கின்ற ஆசிரியர்கள் மாணவர்கள் இணைந்த ஆளணியை முழுமையாக இதற்குள் உள்வாங்க வேண்டும். கற்பிப்பதும் ஆய்வு செய்வதும் செய்தியை தெரிவிப்பதும் எனும் வரையறையிலிருந்து வெளியேறி மாகாண திட்டமிடலில் கண்காணிப்பதில் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அறிவுப்புலத்தை முழுமையாக களமிறக்க வேண்டும். வடமாகாணத்தின் அந்நிய செலாவாணி பங்களிப்பு சுட்டி (GDP) 4 இலேயே நீண்ட காலமாக தங்கி நிற்கின்றது. பிற மாகாணங்கள் அபரிமிதமான வளர்ச்சியை காண்பிக்கும் இந்நேரத்தில் வடமாகாணமும் அத்தகைய தற்றுணிவான செயற்றிட்டங்களை உள்வாங்குவதே சிறந்தது. குறிப்பாக மாணவர்களை இவ்வாறான செயற்றிட்டங்களில் பங்குபற்ற வைப்பதன் மூலம் அவர்களின் அர்ப்பணிப்பை செயலூக்கஞ் செய்வதற்கான வாய்ப்பாகவும் பயன்படுத்திக் கொள்ள முடியும். பல்கலையிலுள்ள மாணவர்கள் அர்ப்பணிப்புள்ளவர்கள். மாணவ சங்கங்களுக்கு பலவகையான சமூகம் சார்ந்த பொறுப்புக்களுமுண்டு. நன்மாணாக்கர்களாக எமது சமூகத்திற்கு உதவிட அவர்களுக்கான சிறந்த வாய்ப்புக்களை பல்கலைக்கழகம் உருவாக்கிக் கொடுக்க வேண்டும். மாணவ சக்தியின் மகத்துவத்தை மாணவர்களும் மக்களும் உணர்வதற்கான சந்தர்ப்பமாக இதனை மாற்றியமைக்க வேண்டும்.

**கேபிள் இணைப்புடைய தொலைத்தொடர்பு வலையமைப்பு**

பேரிடரின் போது தொலைத்தொடர்பு அவ்வப்போது துண்டித்து மீண்டும் இயங்கியதை நாம் அவதானித்தோம். சில தொலைத்தொடர்புகள் முற்றாக தடைப்பட்டும் மக்கள் தமது உறவுகளை தொடர்புகொள்ள முடியாமலும் தத்தளித்ததை நன்கறிவோம். இலங்கை ரெலிகொம் மற்றும் அதனுடனிணைந்த மொபிரெல் இவற்றுடன் ஹச் என்பன இணைப்பில் இருந்து மக்கள் தொடர்பு கொண்டதனையும் அதனால் ஆறுதலடைந்ததனையும் அவதானிக்க முடிந்தது. இது எமக்கெல்லாம் நல்ல பாடமாகவும் அமைந்திருக்கின்றது. சமகால விஞ்ஞானத்தின் வளர்ச்சியுடன் ஒப்பிடும் போது எமது தொலைத் தொடர்பு வலையமைப்பு இன்னும் வலுப்பெற வேண்டும். பேரிடரின் போது மக்களுக்கான தொலைத்தொடர்பு எக்காரணங்கொண்டும் தடைப்படாத வகையில் சீர்செய்யப் படல் வேண்டும்.

**உணவு மற்றும் குடிநீர் வழங்கும் மற்றும் கழிவகற்றும் பொறிமுறை**

பேரிடரின் போது உணவு மற்றும் குடிநீர்த்தட்டுப்பாடு, சுகாதாரமான உணவைப் பெறுவதற்கான வழிவகைகள் மற்றும் கழிவகற்றல் நடைமுறைகள் திட்டமிடப்பட்டு செயலாக்கப்படல் அவசியமாகும். எமது அரச சேவைகள், தனியார் நிறுவனங்கள் முழு அர்ப்பணிப்புடன் செயலாற்றியமையினால் பலவகைகளில் மக்களுக்கு உதவக்கூடியதாயிருந்தது இருப்பினும் இடர்கால தேவைகளுக்கான சிறந்த கட்டமைப்பு பொறிமுறையை விரைந்து செயலாற்ற வழி செய்தல் அவசியமானதாகும். வெள்ளத்தில் அகப்பட்டு மக்கள் இன்னலுறும் போது அவர்களுக்கான உதவிகளை வழங்குவதற்கான பயிற்சிகள் அவசியம் இளையவர்களுக்கும் குறிப்பாக பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படல் வேண்டும். எமது இளையவர்களின் சக்தியை மிகவும் வினைத்திறனாக பயன்படுத்தும் பொறிமுறையை எந் நேரமும் தயார்ப்படுத்தலில் வைத்திருத்தல் அவசியமானதாகும். சிறப்பாக உதவிசெய்தவர்களை நிறுவனங்களை கௌரவப்படுத்துவது அவசியமானதுடன் அவர்களை இன்னும் ஊக்கப்படுத்துவதாகவும் இருக்கும். இவ்வாறான உதவி செய்யும் தன்னலங்கருதாத நற்பணியாளர்களை அவர்களின் தொழில் முனைப்பின்போது கருத்தில் கொள்வதும் சிறப்புக்குரியதாகும். மேற்கூறிய விடயங்களை மாணவர்களின் ஆய்வுக்குட்படுத்தி புத்தாக்கங்களை உருவாக்கி அவற்றை மக்கள் நலன் சார்ந்து மக்கள் பயன்பாட்டுக்கு விடுதல் அவசியமானதாகும். உதாரணத்திற்கு காசுத்தாளை உள்வைத்தால் தானியங்கி இடப்பட்ட காசுக்கான குடிநீர் பெறும் இயந்திரத்தின் செயற்பாட்டை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீட விரிவுரையாளர் உருவாக்கி அது இப்போதும் பலாலி வீதியில் கெற்றப்போல் சந்திக் கருகிலுள்ள தனியார் குடிநீர்வழங்கும் நிலையத்தில் இருப்பதனை குறிப்பிடலாம்.

**சுகாதாரத்துறையை கௌரவியுங்கள் இழிவுசெய்யாதீர்**

பேரிடரின் போது தமது குடும்ப நலன்களை தவிர்த்து உணவின்றி உறக்கமின்றி தொடர்ச்சியாக பணிபுரிந்த வைத்தியர்களை தாதிமார்களை சுகாதார பணியாளர்களை காணக்கிடைத்தது. இவ்வாறு தன்னலமற்று பணிபுரியும் நல்லுள்ளங்களை பொதுவெளியில் நோகடிக்காதீர்கள். சமூக வலைத்தளங்களில் எதுவும் எப்படியும் எழுதலாம் என்பதற்கும் வரையறையுண்டு. யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலை மற்றும் ஏனைய வைத்தியசாலைகள் நோயாளிகளை பராமரிக்கும் பாங்கினை சென்று அவதானித்துப் பாருங்கள். தன்னலமற்று மக்கள் சேவையில் இணைந்திருக்கும் சுகாதாரத்துறையை தாக்கியெழுதும் செய்திகள் அனைவரின் மனதையும் புண்படுத்தும் என்பதனை அறிந்திருந்தும் அதனை தமக்கேற்பான வாய்ப்பாக பணமீட்டும் நோக்குடன் செயற்படுத்துவது சட்ட ரீதியாக கட்டுப்படுத்தப்படல் வேண்டும்.

**நீர் வழிந்தோடும் வாய்க் கால்களின் பராமரிப்பு**

வாய்க்கால்களை கட்டி அவற்றை நீர்வழிந்தோடும் வகையில் வைத்திருக்காவிட்டால் அதனால் எந்த பயனும் இல்லை. வாய்க்கால்கள் கிரமமான முறையில் சுத்தஞ்செய்யப்பட்டு நீர் வழிந்தோடும் வகையில் தயார் நிலையிலிருக்க வேண்டும். அதில் அந்தந்தப் பகுதி மக்களுக்கும் பொறுப்புண்டு. பணியாளர்கள் வந்து வாய்க்கால்களை சுத்தஞ்செய்ய வேண்டும் என்பதிலிருந்து விடுபட்டு அந்தந்தப் பகுதி மக்களுக்கு இந்தப்பொறுப்பு பகிர்ந்தளிக்கப்படல் அவசியமானதாகும். இதற்கான பொறிமுறையை அந்தந்த பகுதி கிராம சேவையாளர்களின் உதவிபெற்று செய்ய முடியும். எமது பகுதியின் சுத்தத்தை நாம் பேணுவதே முறை. அனைவரினதும் ஒத்துழைப்பு கிடைத்தால் எதுவும் சாத்தியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 924





தேவி! குந்தவையை உடனே இங்கு அழைத்து வா!" என்று சுந்தர சோழர் மலையமான் மகளைப் பார்த்துக் கூறினார்.

சக்கரவர்த்திக்கும் முதன் மந்திரிக்கும் நடந்த சம்பாஷணையை வானமாதேவி ஒரு காதினால் கேட்டுக் கொண்டிருந்தாலும், அவளுடைய கவனமெல்லாம் சற்று முன் அருகிருந்து சென்ற ஊமை ராணியின் பேரிலேயே இருந்தது. ஆதலின் சக்கரவர்த்தி குந்தவையை அழைத்து வரும்படி சொன்னதும் மலையமான் மகள் அங்கிருந்து அந்தப்புரத்துக்கு விரைந்து சென்றாள். அவள் அந்தப்புரத்தை அடைந்த போது குந்தவை, வானதி, பூங்குழலி ஆகியவர்கள் பெருங்கலக்கத்தில் ஆழ்ந்திருந்தார்கள்.

அதற்குக் காரணத்தையும் மகாராணி உடனே தெரிந்து கொண்டாள். ஊமை ராணியை அங்கே காணவில்லை. எங்கே என்று கவலையுடன் கேட்ட போது குந்தவை கூறியதாவது: "அம்மா! தங்கள் கட்டளையை நிறைவேற்றுவது சுலபமான காரியமாக இல்லை. ஆயினும் நாங்கள் மூன்று பேருமாகச் சேர்ந்து வற்புறுத்தி மந்தாகினி தேவியைக் குளிப்பாட்டினோம்.

பிறகு புதிய ஆடைகள் அணிவித்தோம். வானதி அவருடைய கூந்தலை வாரி முடிந்து கொண்டிருந்தாள். பூங்குழலி பூத்தொடுத்துக் கொண்டிருந்தாள். ஆபரணங்கள் எடுத்துக் கொண்டிருந்தபோதே, இவளுடைய கூச்சல் கேட்டது. திரும்பி வந்து பார்த்தால் மந்தாகினி தேவியைக் காணவில்லை. கூந்தலை வாரி முடி போட்டவுடனே திடீரென்று அவர் திமிறிக் கொண்டு ஓடிப்போனாராம். அக்கம் பக்கத்து அறைகளில் எங்கேயும் காணவில்லை இன்னமும் தேடிக் கொண்டிருக்கிறோம்!"

இதைக் கேட்டு மலையமான் மகள் புன்னகை புரிந்தார். "அவருக்கு அலங்காரம் செய்தபோது எதிரில் கண்ணாடி இருந்ததா?" என்று கேட்டாள். "இருந்தது சற்றுத் தூரத்தில் இருந்தது" என்றாள் வானதி.

"அவருடைய அலங்கரித்த உருவத்தைத் தற்செயலாகக் கண்ணாடியில் பார்த்திருப்பார். அது அவருக்கு வெட்கத்தை உண்டாக்கியிருக்கும். அதனால் ஓடி எங்கேயாவது மறைந்து கொண்டிருப்பார். இன்னும் நன்றாகத் தேடிப் பாருங்கள். ஒரு வேளை அந்தப்புரத்துப் பூங்காவிற்குச் சென்று ஒளிந்து கொண்டிருந்தாலும் இருப்பார். மதில் ஏறிக் குதிப்பது, பலகணி வழியாகக் குதிப்பது போன்ற காரியங்கள் தான் அவருக்கு வழக்கமானவை ஆயிற்றே?" என்றாள் சக்கரவர்த்தினி.

பிறகு எல்லோருமாக நந்தவனத்துக்குச் சென்று தேடினார்கள். அங்கு ஊமை ராணி அகப்படவில்லை. அவர்களுடைய கவலை அதிகமாயிற்று. முதன் மந்திரியிடமும் சக்கரவர்த்தியிடமும் போய்த் தெரிவிக்கலாமா என்று அவர்கள் எண்ணத் தொடங்கியபோது எங்கிருந்தோ 'டணார் டணார்' என்று ஒரு சத்தம் வந்தது. கருங்கல்லில் இரும்பு உளியினால் ஓங்கி அடிப்பது போன்ற ஓசை. அது எங்கிருந்து அந்த ஓசை வருகிறது என்று காது கொடுத்துக் கவனமாகக் கேட்டார்கள்.

தொடரும்...



# சிறுவர் அரங்கம்

## ஊராரை ஏமாற்றி பறிகொடுத்தான்



(நேற்றைய தொடர்ச்சி)

புரோகிதனை அழைத்து வரச் செய்து, "இந்த ஆயிரம் பொன் உனக்கு எப்படி வந்தது" என்று கேட்டான் அரசன்.

புரோகிதன், தான் பொய் சொல்லி, மக்களை ஏமாற்றி, கிடைத்த பொருட்களை விற்றுச் சேர்த்த பொன்" என்று உண்மையை ஒப்புக் கொண்டான்.

"ஒவ் [illegible] சென்று, ஆயிரம் பொன், எந்த வீட்டில் இருக்கிறது என்பதைக் கண்டு பிடிக்குமாறு, காவலர்களுக்கு உத்தரவிட்டான் அரசன் அவர்கள் சோதனை செய்ததில், வணிகனுடைய வேலையாள் வீட்டில் பொன் அகப்பட்டது.

அவனை அழைத்து வரச் செய்து, விசாரித்தான் அரசன். "புரோகிதன் ஊராரிடம் சேகரித்த பொருள்களை, கங்கைக் கரைக்கு அனுப்பாமல் அடுத்த ஊரில் விற்றதையும், அதை மரத்தடியில் புதைத்து வைத்ததையும், புரோகிதனுக்குத் தெரியாமல் உளவுபார்த்து, அதை எடுத்து வந்தேன்" என்றான் வணிகனின் வேலையாள்.

"புரோகிதனின் மோசடியை, உளவு பார்த்து மரத்தடியில் புதைத்திருந்ததை எடுத்த ஆயிரம் பொன்னையும் அரசாங்கத்தில் ஒப்படைக்காதது என் குற்றம். என்றாலும், புரோகிதனின் மோசடியை ஊரார் அறியச் செய்ததால், உனக்குத் தண்டனை விதிக்காமல் விடுவிக்கிறேன்" என்றான் அரசன்.

அதன்பின் "யாகம் என்றும், ஆயிரம் ஏழைகளுக்கு உணவு அளிப்பதாகவும் ஊராரை ஏமாற்றியதோடு, உண்ணாவிரதம் இருந்து உயிர்விடப் போவதாக, பயமுறுத்தியதற்காகவும் ஒரு வருடம் சிறை தண்டனை புரோகிதனுக்கு விதித்தான் அரசன்.

அந்த ஆயிரம் பொன்னுக்கும், உணவுப் பொருட்களை வாங்கி, ஆயிரம் ஏழைகளுக்கு, உணவு அளிக்குமாறு வணிகனுக்கு உத்தரவிட்டான் அரசன். யாகம், அன்னதானம் என்று சொல்லி மோசடி செய்கிறவர்கள் பலர் இன்றும் காணப்படுகின்றனர்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியைப் பரவச் செய்து, தன்னுடைய மற்றும் பிறரின் வாழ்வை மலரச் செய்யுங்கள். – அறிஞர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ முன்வாருங்கள்

இந்த உலகில் தர்மத்தைத் தவிர வேறு எதுவும் நிலையானதல்ல என்பதை நடைமுறை உலகில் நிதர்சனமாகக் கண்டுள்ளோம். இதையே நம் சித்தர் பெருமக்கள் முன்கூட்டியே கூறி வைத்தனர்.

*... தேசத்திலே யாரும் சதமல்ல நின்றாய் சதம் கச்சியே கம்பனே!* என்கிறார் பட்டினத்தடிகள்.

இந்த உலகில் நிலம் நிலையானது அழிவற்றது என நம்பினோம். கணக்கியலில் காணி, கட்டிடம் நிலையான சொத்து எனப் பதிவிடுகின்றோம்.

ஆனால் மலையகத்தில் ஏற்பட்ட மண் சரிவில் ஒரு ஊரே அழிந்துபோயிற்று எனும்போது அந்த நிலத்தை – அதன் உரிமையை எங்கே தேடி எடுப்பது.

அதுபோல ஒரு கணப்பொழுதில் மாடிக்கட்டிடங்கள் இடிந்து தரை மட்டமாகின. இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது இந்த உலகில் எதுவும் நிலையல்ல.

உண்மை. நாம் சேர்த்த செல்வம் நம் கண் முன்னே அழிந்தும் இல்லாமலும் போகும் போது, நாங்கள் போகின்ற காலத்தில் எங்களுடன் ஏதும் வருமா என்ன?

ஆக, இவ்வுலகிலிருந்து புண்ணிய பாவத்தை மட்டுமே நாம் எடுத்துச் செல்கின்றோம்.

எனவே புண்ணியத்தைத் தேடுவதே நமது நோக்கமாக இருக்க வேண்டும். ஆம், இந்த உலகில் மற்றவர் துன்பம் கண்டு உதவுகின்ற மனம் படைத்தவர்களே புண்ணியவான்கள்.

அதனாலன்றோ பக்கத்திலிருப்பவர் துன்பந் தன்னைப் பார்க்கப் பொறாதவன் புண்ணிய மூர்த்தி என்கிறான் பாரதி.

பாரதியின் இக்கருத்தியல் அவனது சொந்தக் கருத்து மட்டுமல்ல. மாறாக, அவன் தமிழ்க் குடியில் பிறந்ததன் காரணமாக இடுக்கண் களைகின்ற பண்பாட்டின் சொந்தக்காரன் என்பதாலும் அந்த வரிகளை அவன் வகுத்துக் கொண்டான்.

அன்புக்குரியவர்களே! நாட்டில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தம் சில வேளைகளில் நமக்கு பெரிதாகத் தெரியாமல் இருக்கலாம்.

ஆனால் வெள்ள அனர்த்தத்தால் நாட்டின் பெரும்பகுதி சிதைந்து போயிற்று.

அந்த மக்கள் எல்லாவற்றையும் இழந்து போயுள்ளனர்.

உயிர், உடைமை, சொத்து, தொழில் என அந்தத் துன்பப் பட்டியல் நீண்டு செல்கிறது.

அதிலும் மலையக மக்களின் அவலம் சொல்லுந்தரமன்று. இந்த நேரத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எங்களால் இயன்ற உதவிகளைச் செய்ய வேண்டும்.

பொது அமைப்புகள், ஆலய நிர்வாகங்கள், உயர்கல்விச்சாலைகள், பல்கலைக்கழகங்கள் என அனைத்து அமைப்புகளும் இந்த உதவிப் பணியில் களமிறங்குவது காலத்தின் தேவை.

இங்கு இன, மத, மொழி பேதமின்றி அனைவருக்கும் உதவுவது நமது தலையாய கடமையாகும்.

அதிலும் இயற்கை அனர்த்தத்துக்கு ஆளானவர்களுக்கு உதவுவதற்கு புலம்பெயர் மக்களும் அங்குள்ள அமைப்புகளும் முன்வர வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

### மலையக உறவுகளுக்கு கைகொடுக்க

# உதவிப் பொருட்கள் சேகரிக்கும் பணி ஆரம்பம்

நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக் கூடல் ஏற்பாட்டில் மலையக உறவுகளுக்கு உதவிக்கரம் கொடுக்க நிவாரணப் பொருட்கள் சேகரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் நல்லூர் சைவத் தமிழ் பண்பாட்டுக் கலைக்கூடல் வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

நல்லூர் கந்தப் பெருமானின் அருளாசியுடன் நல்லூர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கலைக் கூடல் இடருற்றிருக்கும் மலையக உறவுகளுக்கு உதவிக் கரம் கொடுக்கும் நோக்குடன் அவர்களிடத்தில் நேரில் சென்று அவர்களுக்கு உதவிப்பொருட்களை வழங்குவதற்காக உதவிப் பொருட்களினை சேகரிக்கும் பணியினைத் தொடங்கியுள்ளது

இச் செயற்திட்டத்திற்கு உங்களால் இயன்ற உதவிகளை பொருட்களாகவோ அல்லது பணமாகவோ வழங்கி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

நீங்கள் வழங்குவது சிறு உதவி என்றாலும் அதனை மனமுவர்ந்து தங்கள் இருப்பிடம் தேடி வந்து பெற்றுக்கொள்வோம்.

எனவே இச் செயற்திட்டத்திற்கு உதவிகளை வழங்க விரும்புபவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவதுடன் கீழுள்ள வங்கிக் கணக்கிலகத்தினுடாகவும் தங்கள் உதவிகளினை வழங்க முடியும்.

தொலைபேசி இலக்கங்கள் 077 726 5026, 077 116 6090, 077 299 9699

வங்கி விபரம்:

Nallur Saiva Tamil Culture & Arts Center Bank - Bank Of Ceylon, Branch - Nallur (358), AC No - 0087083957 (ம-7)

## வெள்ளத்தில் நாசமான உணவுப்பொருட்கள்

(நுவரெலியா)

நுவரெலியா மாவட்டத்தில் கடந்த நாட்களில் ஏற்பட்ட மோசமான வானிலையால் நுவரெலியா பிரதான நகரம் முழுவதையும் மூழ்கடிக்கும் அளவுக்கு வெள்ளம் பாய்ந்தோடியது.

இவ் வெள்ளப்பெருக்கு காரணமாக நுவரெலியா பிரதான நகரில் வீடுகள், கட்டிடங்கள், ஏராளமான வர்த்தக நிலையங்கள் என்பவற்றில் வெள்ள நீர் தேங்கி காணப்பட்டது. மேலும் ஒரு சில வர்த்தக நிலையங்கள் நீரில் அடித்து செல்லப்பட்டன. விற்பனை நிலையங்கள்வெள்ளத்தினால் பாரிய பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளன.

நுவரெலியாவில் வெள்ள நீர் உட்புகுந்த விற்பனை நிலையங்கள், களஞ்சியசாலைகள் போன்றவற்றிலுள்ள பெரும்பாலான உணவு பொருட்கள் சேதமடைந்துள்ளன.

வெள்ளத்தால் பழுதடைந்த உணவுப் பொருட்களை அழிப்பது பொது சுகாதாரத்தைப் பாதுகாப்பதற்கான ஒரு முக்கியமான செயலாகும் என்பதால் நுவரெலியாவில் விற்பனை நிலையங்கள் மற்றும் களஞ்சிய சாலைகளில் உணவுக்கு உகந்ததாக இல்லாத அல்லது சேதமடைந்த உணவுப் பொருட்கள் அனைத்தையும் அப்புறப்படுத்தப்படுகின்றன.

இவற்றில் அரிசி, பருப்பு, பயறு, கடலை, சீனி, சோயா மீட், தேங்காய் எண்ணெய் உள்ளிட்ட அதிகமான அத்தியாவசிய உணவு பொருட்கள் வெள்ள நீரால் பழுதாகியுள்ளன.

இதனை விற்பனையாளர்களும், களஞ்சிய சாலை உரிமையாளர்களும் அகற்றி நுவரெலியா மாநகர சபை வாகனங்கள் மூலம் வெளியேற்றி அவற்றை சுத்தம் செய்து மீண்டும் பயன்படுத்தவோ அல்லது விற்பனை செய்யவோ முடியாத வகையில் அழித்து வருகின்றனர். (நி)

### பாகிஸ்தானுடனான தீராப் பகை

## இலங்கை அரசுக்காக விட்டுக்கொடுத்த இந்தியா

(டில்லி)

இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை அனுப்புவதற்காக இந்திய வான் பரப்பைப் பயன்படுத்துவதற்கு பாகிஸ்தானுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு மனிதாபிமான உதவிகளை விமானம் மூலம் அனுப்புவதற்கான தமது முயற்சிகள் தாமதமானதாக பாகிஸ்தான் முன்னதாக தெரிவித்திருந்தது.

நிவாரணப் பொருட்களைக் கொண்டு செல்லும் தங்களது விமானம் இந்திய வான் பரப்பைப் பயன்படுத்த இந்தியா மறுப்பு தெரிவித்துள்ளமையால் இந்த தாமதம் ஏற்பட்டுள்ளதாக பாகிஸ்தான் தரப்பில் குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டிருந்தது.

தேசிய அனர்த்த முகாமைத்துவ அதிகாரசபை மற்றும் பாகிஸ்தான் விமானப்படை ஆதரவுடன் பாகிஸ்தான் ராணுவத்தின் 45 பேர் கொண்ட நகர்ப்புற தேடல் மற்றும் மீட்புக் குழுவினர் C-130 ரக விமானத்தில் இலங்கைக்குப் புறப்படத் தயாராக இருந்தனர்.

எனினும், இந்த நடவடிக்கையை முற்றிலும் மனிதாபிமான நடவடிக்கை என்று பாகிஸ்தான் குறிப்பிட்டிருந்தும் இந்திய வான்பரப்புக்கான அனுமதி மறுக்கப்பட்டதால், இந்த விமானப் பயணம் தடைப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (நி)

### ஐக்கிய அரபு இராஜ்ஜியம்

## இலங்கைக்கு உதவி

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் இருந்து உதவிகளை ஏற்றிய விமானம் நேற்றுக் காலை நாட்டை வந்தடைந்துள்ளது.

உணவு மற்றும் கூடாரங்கள் உள்ளிட்ட மனிதாபிமான உதவிப் பொருட்கள் இந்த நன்கொடையில் அடங்கும்.

உதவிப் பொருட்களை, கொழும்பிலுள்ள ஐக்கிய அரபு இராஜ்ஜிய தூதரகத்தின் இரண்டாவது செயலாளர் உத்தியோகபூர்வமாகக் கையளித்தார். (நி)

## மட்டுப்படுத்தப்பட்ட வகையில் ரயில் சேவைகள் இயங்கும்

### புகையிரதத் திணைக்களம் அறிவிப்பு

மட்டுப்படுத்தப்பட்ட வகையில் ரயில் சேவைகள் இயங்கும் என ரயில் திணைக்களம் அறிவித்துள்ளது.

பிரதான மார்க்கத்தில் ரயில் சேவைகள் அம்பேபுஸ்ஸ வரை மட்டுமே இயங்கும் என ரயில் திணைக்களம் அறிவித்துள்ளது.

புத்தளம் மார்க்கத்தில் ரயில் சேவைகள் கொச்சிக்கடை வரை மட்டுமே இருக்கும் எனவும் களனி வெளி மற்றும் கரையோர மார்க்கங்களில் சேவைகள் வழக்கம் போல் இயங்கும்.

தற்போது நிலவும் சீரற்ற வானிலையினால் பொல்க ஹவெல, ரம்புக்கனை, குருநாகல், கனேவத்த, சிலாபம் மற்றும் புத்தளம் ஆகிய இடங்களுக்குச் செல்ல முடியாததால் பிரதான மற்றும் புத்தளம் மார்க்கங்களில் 18 ரயில்கள் நிறுத்தப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

புரிதலில்லா சமூக வலைத்தளப் பகிர்வு,
அனுமதியில்லா புகைப்படம்.
இரண்டும் டிஜிட்டல் வன்முறையே.
16
2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனர்த்தத்தால்...

நேற்று(02) மாலை 6.00 மணிக்கு வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையின்படி, அனர்த்தங்களினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 465 ஆக அதிகரித்துள்ளதுடன், 366 பேர் காணாமல் போயுள்ளனர்.

இதுவரை கிடைக்கப்பெற்ற தகவல்களின்படி, 25 மாவட்டங்களிலும் 437,507 குடும்பங்களைச் சேர்ந்த 1,558,919 பேர் (15 இலட்சத்து 58 ஆயிரத்து 919 பேர்) பாதிக்கப்பட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்த மக்களுக்காக நாடளாவிய ரீதியில் 1,433 பாதுகாப்பு முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்முகாம்களில் 61,875 குடும்பங்களைச் சேர்ந்த 232,752 பேர் பாதுகாப்பாகத் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சொத்து சேதங்களைப் பொறுத்தவரையில், 783 வீடுகள் முழுமையாகவும், 31,417 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## இலங்கை...

சஜித் பிரேமதாச கோரிக்கை முன்வைத்துள்ளார்.

டித்வா சூறாவளி புயல் மற்றும் அதன் பின்னர் ஏற்பட்ட கடுமையான பேரிடர் நிலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் உலக வங்கியின் இலங்கைப் பிரதிநிதிகள் குழுவுடனான விசேட சந்திப்பொன்று நேற்று (02) கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இலங்கை மற்றும் மாலைதீவுகள் ஆகிய நாடுகளுக்கான உலக வங்கியின் வதிவிடப் பிரதிநிதி கிவோர்க் சார்கஸ்ஜான் மற்றும் உலக வங்கியின் சிரேஷ்ட செயற்பாட்டு அதிகாரி அசேல திஸாநாயக்க ஆகியோர் இச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

பேரனர்த்தம் மற்றும் அதன் பிற்பாடு ஏற்பட்டுள்ள அதன் தற்போதைய தாக்கம் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உலக வங்கிப் பிரதிநிதிகளுக்கு இங்கு விளக்கமளித்ததோடு, இதுவரை மனித உயிர்கள், சொத்துக்கள் மற்றும் பெருமளவிலான உட்கட்டமைப்பு வசதிகள் அழிந்து, சேதமடைந்துபோயுள்ள விதம் தொடர்பிலும் எடுத்துக்காட்டினார்.

இதன் பிரகாரம், இந்த உட்கட்டமைப்பு வசதிகளை புனர்நிர்மாணம் செய்து, மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கும், அழிந்துபோயுள்ள, சேதமடைந்துபோயுள்ள சொத்துக்கள் மற்றும் தொழில்முயற்சிகளை மீண்டும் கட்டியெழுப்பி, மக்களை மீண்டும் தூக்கி விட்டு பக்கபலத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கும் தேவையான உதவி ஒத்துழைப்புகளை இலங்கைக்குப் பெற்றுத் தருமாறு உலக வங்கி பிரதிநிதிகளிடம் கோரிக்கை விடுத்தார். (ம-7)

## உயர்தரப்...

சூழ்நிலை காரணமாக, க.பொ.த உயர்தரப் பரீட்சை உட்பட அனைத்து திட்டமிடப்பட்ட தேர்வுகளையும் கல்வி அமைச்சு முன்னதாக காலவரையின்றி ஒத்திவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## வீடுகளுக்கான...

செலுத்தப்படாத மின் கட்டணங்களுக்கு மின்சாரத்தை CEB நிறுத்தாது என்றும், எதிர்கால பில்லிங் சுழற்சிகளில் ஏதேனும் நிலுவைத் தொகைகள் சேர்க்கப்படும் என்றும் அவர் கூறினார். இந்தக் காலகட்டத்தில் எந்த மின் துண்டிப்பும் மேற்கொள்ளப்படாது என்றும் அவர் கூறினார்.

நிலவும் சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்ட பல பகுதிகளில் மீட்டர் வாசிப்பு மற்றும் மின் கட்டணங்களுக்கான ரிசீட் விநியோகம் சாத்தியமற்றதாக உள்ளது என்றும் இதன் விளைவாக, இந்த நுகர்வோருக்கான மின்சாரக் கட்டணங்கள் வரும் மாதங்களில் வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சீரற்ற வானிலை காரணமாக இலங்கை மின்சார சபையும் குறிப்பிடத்தக்க இழப்பைச் சந்தித்துள்ளதாகவும், இதை மதிப்பிடும் பணிகள் தற்போது நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் கூறினார். (ம-7)

## முன்னாள்...

பட்ட முன்னாள் அமைச்சர் சி.பி. ரத்நாயக்கவை எதிர்வரும் டிசம்பர் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

வாக்குமூலம் அளிப்பதற்காக, முன்னாள் அமைச்சர் சி.பி. ரத்நாயக்க நேற்றுக் காலை இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் ஆஜராகியிருந்தார். அங்கு அவரிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தைத் தொடர்ந்து அவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போதே, அவரை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம-7)

# இலங்கையை மீட்டெடுக்க முன்வந்துள்ள சர்வதேச நாடுகள்

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட, இலங்கையை மீட்டெடுக்கச் சர்வதேச நாடுகள் முன்வந்துள்ளன.

அதன்படி, நிதி மற்றும் பொருள் ரீதியான நிவாரண உதவிகளை சில நாடுகள் வழங்கியுள்ளன.

அதற்கமைய, சர்வதேச மனிதாபிமான நட்பின் ஊடாக நியூசிலாந்து, அவசர மனிதாபிமான நிவாரணத்தை ஆதரித்து, ஒரு மில்லியன் நியூசிலாந்து டொலரை நன்கொடையாக வழங்கியுள்ளது.

இதனிடையே, டித்வா புயலால் ஏற்பட்ட பேரழிவிலிருந்து இலங்கை மீள்வதற்காக பிரித்தானியாவும் அவசர நிவாரண நிதி உதவியை வழங்குவதாக அறிவித்துள்ளது.

அதன்படி, எட்டு இலட்சத்து 90 ஆயிரம் அமெரிக்க டொலர் நிவாரண நிதியை இலங்கைக்கு வழங்குவதாக பிரித்தானியா அறிவித்துள்ளது.

குறித்த நிதியானது செஞ்சிலுவைச் சங்கம், ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான அமைப்பு மற்றும் உள்ளூர் பங்காளிகளுடன் இணைந்து அவசரப் பொருட்கள் மற்றும் உயிர்காக்கும் உதவிகளை வழங்குவதற்காகப் பயன்படுத்தப்படும் என இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, சீன அரசாங்கமும் இலங்கைக்கு ஒரு இலட்சம் அமெரிக்க டொலரை நன்கொடையாக வழங்குவதாக அறிவித்துள்ளது.குறித்த நிதியை, சீன செஞ்சிலுவைச் சங்கத்திடம் வழங்கியதாக இலங்கையில் உள்ள சீனத் தூதரகம் அறிவித்துள்ளது.(ம-7)

# வீடுகளை சுத்தம் செய்ய ரூ. 25 ஆயிரம் கொடுப்பனவு

அனர்த்தம் காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்கள் மீண்டும் தமது வீடுகளுக்குத் திரும்பும் போது, அவற்றைச் சுத்தம் செய்வதற்காக அரசாங்கம் வழங்கத் தீர்மானித்திருந்த 10 ஆயிரம் ரூபா கொடுப்பனவை, 25 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சு இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக அதன் செயலாளர் கலாநிதி ஹர்ஷன சூரியப்பெரும தெரிவித்துள்ளார். (ம-7)

## ஒதியமலை...

முல்லைத்தீவு ஒதியமலை கிராமத்தில் 1984.12.02 ஆம் திகதியன்று இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட 32 தமிழ் மக்களின் 41 ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று உணர்வெழுச்சியுடன் மேற்கொள்ளப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக் கிராமமான ஒதியமலையில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபி வளாகத்தில் குறித்த நினைவேந்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

படுகொலை செய்யப்பட்ட உறவுகளுக்கு ஈகச் சுடரேற்றப்பட்டதுடன், நினைவுத் தூபிகளுக்கு மலர்தூவி, மலர்மாலை அணிவிக்கப்பட்டு உறவுகளால் உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

நினைவேந்தல் நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் , புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் தபிசாளர் வே.கரிகாலன், புதுக்குடியிருப்பு பிரதேச சபை உறுப்பினர் கிரிதரன், சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர். (ம-7,299)

## திருநெல்வேலி...

கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் யாழ்ப்பாணம், காங்கேசன்துறை மற்றும் தெல்லிப்பழைப் பகுதிகளைச் சேர்ந்த 23 முதல் 32 வயதுக்குட்பட்டவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

இந்தக் குற்றத்தைச் செய்த சந்தேக நபரும், அவருக்கு உதவிய 05 சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்ட நிலையில், ஒரு வான், ஒரு மோட்டார் சைக்கிள் மற்றும் குற்றத்தைச் செய்யப் பயன்படுத்தப்பட்ட 3 கையடக்கத் தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

வன்முறைக் கும்பலுக்கு இடையே ஏற்பட்ட நீண்டநாள் பகையே படுகொலைக்கு காரணம் எனப் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நபர் ஒருவரே சிறையில் இருந்து கொண்டு குறித்த படுகொலைக்கு திட்டம் தீட்டியுள்ளார்.

தெல்லிப்பழையில் வட்டித் தொழிலில் ஈடுபடும் நபருக்கு சொந்தமான வீடொன்றில் தாக்குதலுக்கு திட்டமிடப்பட்டு ஒத்திகையும் பார்க்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,33)


மஹஜன சம்பத
திகதி 2025.12.02
சீட்டிழுப்பு இலக்கம் 6029
N 4 3 3 1 1 9
அத சம்பத
N 3 1 1 9
சீட்டிழுப்பு இலக்கம் 0604

தன நிதானய
திகதி - 2025.12.02
சீட்டிழுப்பு இலக்கம் - 2059
T 41 57 63 70 T

சுப தவசக்
2025.12.02
0145
26 44 63
0300

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.12.02
சீட்டிழுப்பு இலக்கம் 1338
விருச்சிகம் 16 24 36 41 விருச்சிகம்

ஜய
திகதி 2025.12.02
சீட்டிழுப்பு இலக்கம் 0297
S 3 0 5 3

மெகா பவர்
திகதி 02/12/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2377
I 23 07 10 11 23


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்ஜெட்...

மற்றும் தோட்டத் தொழில்கள் மற்றும் சமூக உள்கட்டமைப்பு அமைச்சகத்தின் செலவின தலைப்புகள் இன்று விவாதிக்கப்படவுள்ளன.

பேரிடர் சூழ்நிலை காரணமாக பாராளுமன்ற உறுப்பினர்களின் வருகை இன்று குறையக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-7)

## டிசம்பர் 4ஆம்...

நாட்டில் குறிப்பாக வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா மற்றும் மத்திய மாகாணங்களில் மழையுடனான வானிலை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக அத்திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வளிமண்டலவியல் திணைக்களத்தினால் வெளியிடப்படும் எதிர்கால முன்னறிவிப்புகள் மற்றும் அறிவிப்புகள் குறித்து அவதானத்துடன் இருக்குமாறு பொது மக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

### மஹஜன சம்பத
திகதி 2025.12.02 — சீட்டிழுப்பு இலக்கம் 6028
ஆங்கில எழுத்து W — வெற்றி இலக்கங்கள் 3 0 4 2 6 4
அத சம்பத: W 4 2 6 4 — சீட்டிழுப்பு இலக்கம் 0603

### சுப தவசக்
திகதி 2025.12.02 — சீட்டிழுப்பு இலக்கம் 0144
வெற்றி இலக்கங்கள்: கன்னி 14 20 44 — 8132

### தன நிதானய
திகதி - 2025.12.02 — சீட்டிழுப்பு இலக்கம் - 2058
F 09 13 45 80 F

### கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4271 — சீட்டிழுப்பு திகதி 02.12.2025
ஆங்கில எழுத்து B — வெற்றி இலக்கங்கள் 17 18 20 37 — B

### மெகா பவர்
திகதி 02/12/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2376
R 26 12 23 66 74

### ஜய
திகதி 2025.12.02 — சீட்டிழுப்பு இலக்கம் 0296
C 5 9 5 3

### ஹந்தஹன
உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.12.02 — சீட்டிழுப்பு இலக்கம் 1337
மிதுனம் 03 48 51 53 மிதுனம்

### மஹஜன சம்பத
திகதி 2025.12.02 — சீட்டிழுப்பு இலக்கம் 6027
L 8 0 9 6 8 3
34 83140 — 746451 — 33773
2422259, 1100433, 2055667, 2599255, 1241399, 3489569, 2916958, 2247005, 2923146, 0878381, 3868298, 1939662
அத சம்பத: L 9 6 8 3

### சுப தவசக்
திகதி 2025.12.02 — சீட்டிழுப்பு இலக்கம் 0143
துலாம் 16 22 55 — 4218

### தன நிதானய
திகதி - 2025.12.02 — சீட்டிழுப்பு இலக்கம் - 2057
I 03 06 16 28 I

### மெகா பவர்
திகதி 02/12/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2375
O 02 28 43 48 78

### ஜய
திகதி 2025.12.02 — சீட்டிழுப்பு இலக்கம் 0295
C 3 1 1 2

### கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4270 — சீட்டிழுப்பு திகதி 02.12.2025
Y 14 25 33 36 — Y

### ஹந்தஹன
உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.12.02 — சீட்டிழுப்பு இலக்கம் 1336
விருச்சிகம் 17 23 34 46 விருச்சிகம்

### சுபிரி வாசனா — உத்தியோகபூர்வ முடிவுகள்
01.12.2025 — வெற்றி வாரம் 0738 — Z 6 8 7 0 4 6 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.29,681,000.00
30.11.2025 — வெற்றி வாரம் 0737 — A 5 3 8 8 4 2 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.29,670,565.60

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3004 — 2025.12.01 — திங்கட்கிழமை — 08 27 48 52 H — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.78,641,788.00
சீட்டிழுப்பு வாரம் 3003 — 2025.11.30 — ஞாயிற்றுக்கிழமை — 03 09 24 35 X — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.78,605,892.00

### சனிதா
01.12.2025 — வெற்றி வாரம் 5165 — 27 34 44 56 X — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,719,918.80
30.11.2025 — வெற்றி வாரம் 5164 — 17 19 31 52 E — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,699,538.80

### சசிரி
834 — 01.12.2025 — திங்கட்கிழமை — 02 20 44 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 628,960.00
833 — 30.11.2025 — ஞாயிற்றுக்கிழமை — 05 14 37 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 679,120.00

### ராசி
சீட்டிழுப்பு வாரம் 4716 — 01.12.2025 — திங்கட்கிழமை — 13 25 33 56 — மேடம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,410,782.80
சீட்டிழுப்பு வாரம் 4715 — 30.11.2025 — ஞாயிற்றுக்கிழமை — 12 21 29 56 — விருச்சிகம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,369,525.20

### கப்ருக
2180 — 01.12.2025 — திங்கட்கிழமை — W 23 39 56 63 64 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.610,502,682.60
2179 — 30.11.2025 — ஞாயிற்றுக்கிழமை — X 10 09 18 28 62 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.610,469,178.00

### அட கோடிபதி
திங்கட்கிழமை — வெற்றி வாரம் 2830 — 2025.12.01 — 11 21 32 34 R — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,430,944.80
ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம் 2829 — 2025.11.30 — 52 53 57 72 S — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,382,793.60

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# NEW SCIENCE HALL
## KANNATHIDDY ROAD, JAFFNA

## 2026 A/L DAY CLASS

2025 A/L பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்குரியது
**கணித, விஞ்ஞான பிரிவுகள்**
திங்கள் தொடக்கம் வெள்ளி வரை

**COM.MATHS**
P. செந்தில்நாதன்
6.15 - 7.45 AM
S. சிவகரன்
5.00 - 7.00 PM

**BIOLOGY**
V.S.குணசீலன்
8.00 - 9.30 A.M
K.இராகவன் Zoom
8.00 - 9.30 PM

**AGRYCULTUR**
K.அரசிளங்குமரன்

**CHEMISTRY**
V.K.நந்தா
9.30 - 11.30 AM
N.அபராஜிதன்
பிரிவு I
6.00 - 7.30 AM
பிரிவு - II
2.00 - 3.30 PM

**PHYSICS**
G.பிரபா
R.ராகுலன்
12.00 - 2.00 PM

(C-4474)

- Zoom வகுப்புக்களும் நடைபெறும்.
- சகல மாவட்டங்களில் இருந்தும் இணைந்து கொள்ளலாம்.

**ஆரம்பம் : 05.12.2025 (வெள்ளிக்கிழமை)**

தொடர்புகளுக்கு : 077 791 7611, 076 566 3006
: 076 569 3006
f https://facebook.com/New Science hall Jaffna


## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 06.11.2025 வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவர்

### அமரர் வேலாயுதம் ஸ்ரீ சிவாயன் (அப்பு)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 04.12.2025 வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் **"கீரிமலை புனித தீர்த்தக்கரையில்"** நடைபெறும். அதனைத் தொடர்ந்து 06.12.2025 சனிக்கிழமை நண்பகல் **"அன்னாரது இல்லத்தில்"** நடைபெறவிருக்கும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் நண்பகல் 12.00 மணிக்கு நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும். (2509)

குமரகிரி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.
076 805 8310
076 202 6601
இங்ஙனம்
குடும்பத்தினர்


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127



## Divorce மணப்பெண் தேவை

01.காரைநகர், இந்து, 1990, ஆயிலியம், ACCA, Own business, UK citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (58386)
02.வடமராட்சி, இந்து, 1985, கார்த்திகை, MSc electrical Engineer, UK citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (29463)
03.பளை, இந்து, 1984, அவிட்டம், phd, Uk citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(33058)
04.காரைநகர், இந்து, 1986, மகம், phd lecturer, UK citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(36878)
05.கரவெட்டி, இந்து, 1984, விசாகம், Bachelor of computer Application, Uk citizen Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(37556)
06.திருநெல்வேலி, இந்து, 1986, கேட்டை, BSc, London citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(46812)
07.புலோலி, இந்து, 1982, சுவாதி, Bsc Engineering, degree (UK), Australia citizen Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (35391)
08.நெல்லியடி, 1991, பூராடம், HND(Jaffna university), USA citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை.(47452)
09.நல்லூர், இந்து, 1982, அத்தம், Masters in electrical Engineering, USA + canada, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (25039)
10.யாழ்ப்பாணம், இந்து, 1982, அத்தம், Masters in electrical Engineering, USA + canada citizen, Divorce மாப்பிள்ளைக்கு பெண் தேவை. (24750)

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். (1754)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728



வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (6049)
076 825 7716 (ஆகாஸ்)



## உடனடி வேலைவாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம்
(ஆண்கள் விரும்பத்தக்கது)
வெளிமாவட்டங்களில் வேலை செய்ய விரும்புவோருக்கு
முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)
சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
(C-4477)

V2 TRAVELS
v2vacancies@gmail.com
076 1410725
076 8226236



## வேலைவாய்ப்பு - Sales Representative (Rep)

**Sun Marketing (Pvt) Ltd**

தகுதி:
Two-wheeler & licence கட்டாயம்
Sales அனுபவம் இருந்தால் சிறப்பு
வாடிக்கையாளர்களுடன் நன்றாக பேசத் தெரிந்திருக்க வேண்டும்
பொறுப்பு: வாடிக்கையாளர்களை சந்தித்து sales & orders பெறுதல்
(C-4475)

தொடர்புக்கு : 076 139 1993



## கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3580/- |
| 11-16 Kg | 2610/- |
| 21-22 Kg | 2380/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-4477)

UK 11Kg - 1420/- | France 11Kg - 2170/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2300/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS
076 822 6241


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.101, [illegible] ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.